710

REGISTERED No. M. 1754. மலர் 1 இதழ் 7.

உ

சிவமயம்

# ஜீவானந்த போதினி

உருத்திரோத்காரி ஆண்டு ஐப்பசித் திங்கள்

பத்திராசிரியர்:—
தமிழ்ப்புலவர் மணி. திருஞானசம்பந்த முதலியார்.
தமிழ்ப்புலவர் சிவ. முத்துக்குமாரசுவாமிமுதலியார்


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| கடவுள் வணக்கம். | 101 |
| தாயுமானவர்—திருநாவுக்கரசு முதலியார். | 102 |
| தத்துவ ஆராய்ச்சி—தாயுமானவர். | 103 |
| கோநாயும் ஆட்டுக்குட்டியும் —மணி. திருநாவுக்கரசு முதலியார். | 104 |
| இறைவன் செயல்—சிவ-முத்து. | 106 |
| ஆன்ம உண்மை—திருஞானசம்பந்த ஸ்ரீ | [illegible] |
| மக்கட்பிறவி—கி. சதாசிவ நாயகர். | 110 |
| தமிழை வளர்த்தல் —மணி-திருநாவுக்கரசு முதலியார். | 114 |
| குயிலும் பாடகச்சிறுவனும் —கா. ர. கோவிந்தராச முதலியார். | 118 |
| யதீந்திரர்—பா. கண்ணப்ப முதலியார். | 119 |
| சிவராஜன்—திருஞானசம்பந்த முதலியார். | 123 |
| விடுகதை—சிவ-முத்து. | 126 |
| பிரளயகாலமோ?—எ. முத்துகிருஷ்ணன். | 127 |
| நம்பியாண்டார் நம்பி—மணி. கோபாலன் | 128 |
| மாணவனுக்கு மதியுரைத்தல் —மணி. கோட்டீச்சுவர முதலியார் B. A. | 130 |
| திருத்தம் | 132 |
| மனமோகனன்—சிவ. முத்து. | 133 |
| குடியர் கொண்டாட்டம்—ஞான முத்து. | 136 |
| அபிப்பிராயம்—சிவ-முத்து. | 140 |
| விளம்பரம். | |


29 JAN 1924

அதிபர்:—நாகை த. இரத்தினவேலு முதலியார்.
தனியாம்பாள் விலாச அச்சுக்கூடம்
1/382, தங்கசாலை வீதி, சென்னை.
அக்டோபர் 1923
வருட சந்தா ரூ. 1 ] [தனிப்பிரதி அ. 2

சத்தியமாய் நோய்நீங்கவில்லை என்பதற்குபணம்வாபீஸ்செய்யப்படும்

## சகலமேக ராஜசஞ்சீவி மெழுகு.

இந்த பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி மெழுகை காலை மாலை இருவேளையும் 40-நாளைக்கு உட்கொண்டால் வெகுநாளாய் தேகத்தில் ஊரிய மேகரோகங்கள் மேகவுாய்வு தனுர்வாதம் சகலமான பிடிப்புகள் மேகரோகத்தாலுண்டான வெடிப்புரிணங்கள் குழிப்புண்கள் புரையோடுகிற புண்கள் திமிர்வாய்வு கைகால் விரல்களில் மேக நீர் தங்கிய நோய்கள் கிரந்தி படைகிரந்தி லிங்கத்திலுண்டாகும் கொருக்குப்புண்கள் வெகுநாளாக அநேக அவிழ்தங்களை சாப்பிட்டும் தீராத வெள்ளை மஞ்சள்வெள்ளை தங்கிவெள்ளை கிரந்திபுண்கள் தொடைவாழை கொருக்குபுண்கள் படைகள் நக்கண்ணுநோய்கள் மூனைவீக்கம் முதலிய ரோகங்களெல்லாம் நெருப்பிலிட்ட பஞ்சு போற் பறந்தோடிபோகும். கடினபத்தியங்கள் முதலியவின்றி தயிர் மோர் பால் நெய் கறி பழையசாதம் முதலியவைகளுடன் சாப்பிடக் கூடியதும், பேதி இளைப்பு ஆயாசம் இவைகளின்றி சுகமாய் வியாதிகளைக் கண்டிக்கும். 24-நாள் மருந்து 3-0-0 48-நாள் மருந்து 5-0-0

### குன்மரோக சம்மாரி.

குன்மம் 8-விதம். அதிக ஏப்பம், மலபந்தம், வயிர் நிறைந்தது போலிருத்தல். தீர்ப்பலம், குடலிரைச்சல், வயிற்றில் அற்பக் கூச்சலோடு உப்பிசம், வயிர்நோகுதல், வாந்தியாகுதல் அன்னம் உண்டால் வயிர்நோதல், விலாவில் நோதல், புளியேப்பம், மூர்ச்சை, வயிர் புண்ணுயிருத்தல், சூலைநோய், மார்புநோய், வயிற்றில் கட்டிகிராளல் முதலிய அநேகவிதமாய் காணப்படும் மேற்படி ரோகங்களை எமது மருந்து சாப்பிட்ட 20 தினத்திற்குள் ஆச்சரியப்படும்படி சந்தேகமின்றி குணப்படுத்துவதில் நிகரற்றதாய் இருக்கிறது பரிசூதிக்கவும்.

24-நாள் மருந்தடங்கிய டப்பி ரூபா 2 8 0

### மலசுத்தி லேக்கியம்.

இந்த லேகியத்தை 5-வயது குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் சாப்பிடலாம். இதனால் கைகால் குடைச்சல், கெற்பவாய்வு, மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு எப்போதும் வயிற்றில் கோளாருகவே யிருத்தல், மலச்சிக்கல், மலவாட்சி முதலான வயிற்றிலுள்ள எல்லா வியாதிகளையும் நிவர்த்தியாக்கும். மலச்சிக்கலில்லாமல் அன்றாடமலத்தை அன்றாடம் கழிக்கும். 1 டப்பியின் விலை ரூபா 1 0 0

### தீராதெனக் கைவிடப்பட்ட

### மேகவெள்ளைக்கு மேககுலாந்தக மாத்திரை.

தூர்த்த ஸ்திரீகளின் கூட்டுறவால் உண்டாகும் மேகம், மேகத்தாலுண்டாகும் மேகவெள்ளை நீர்சுருக்கு நீர்தாரையினின்றும் சீழ்ரத்தம்வடிதல் நீரெரிச்சல் நெடுநாளாய் தேகத்திலூறி சிறிதுசிறிதாக சிலைநனைந்துகொண்டு துன்பப்படுத்தும் ஓர்வித நீர் வெள்ளைமுதலிய ஆண் பெண் இருவரும் எத்தனைவருடம் சென்றதாயின் இம்மருந்தை எண்ணிக்கையாக 7 தினம் உட்கொள்ளலாம் மறுபடியும் அந்நோய் அணுகாது உத்தாரவாதம். 24 மாத்திரை டப்பி 1-க்கு ரூபா 2 4 0

தெ. வே. சுப்பிரமணியம் அண்டு கோ.

15, பொன்னியம்மன் கோயில் தெரு, மின்ட் போஸ்டு சென்னை.

ஓம்

சிவமயம்

# ஜீவானந்த போதினி

சிறந்த தமிழ்ப் புலவர்களைக்கொண்டு நடத்தப்படும்

ஒரு தமிழ் மாதப் பத்திரிகை

ALL RIGHTS RESERVED

| மலர் 1 | உருத்திரோத்காரி ஆண்டு ஐப்பசித்திங்கள்<br>அக்டோபர் 1923 | இதழ் 7 |
| --- | --- | --- |

224878

## கடவுள் வணக்கம்

சிவபெருமான் :

இன்றெனக்(கு) அருளி, இருள்கடிந்து, உள்ளத்து
 எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்,
 நீ அலால் பிறிதுமற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
 திருப்பெருந்துறை உறை சிவனே!
ஒன்று நீ அல்லை; அன்றி ஒன்று இல்லை;
 யார் உன்னை அறியகிற்பாரே!

— மணிவாசகர்.

திருமால் :

தாழ்சடையும், நீள்முடியும், ஒண்மழுவும், சக்கரமும்,
சூழரவும், பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து.

— பேயாழ்வார்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே, வேங்கடவா, நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே!

— குலசேகர ஆழ்வார்.

கலைமகள் :

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகல கலாவல்லியே.

— குமரகுருபர சுவாமிகள்.

# தாயுமானவர்

இவர் ஒரு சிறந்த துறவி; தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்கள் அருளிச்செய்த திருஞானசம்பந்தர் முதலியோர் கல்லும் உருகப் பாடிய பாடல்களை நன்கு கற்றுப் பயின்று, இப்பிறவியின் துன்பத்தை இனிது உணர்ந்து, வீட்டை அடையப் பெரிதும் முயன்று, திருமூலயோகிகள் திருமரபில் வந்த 'மௌன சுவாமிகள்' என்னும் குருமணிபால் உபதேசம் பெற்று நிட்டைகூடி நின்றவர். இவ்வுண்மை இவரது பாடல்களால் நன்கு புலப்படும். தம் குருநாதன் உபதேசச் சிறப்பைக் கிளந்து கூறும் அழகுகளை உற்று நோக்கின் இவரது உள்ளக் கனிவு இத்தன்மைத்து என்பது செவ்வனம் விளங்கும்.

இவர் இளமையிலேயே துறவுள்ளம் உடையராக இருந்தனர். இவருக்கு இவ்வுலக வாழ்வு சிறிதும் இன்புறுத்த வில்லை. இவர் எல்லாத் துப்புரவுகளும் உடையராக இருந்தும் இப்பொய்யின்பத்தின் வெறுந் தோற்றத்தை உள்ளவாறு உணர்ந்து மெய்யுலகின் உண்மை இன்பத்தினையே அவாவி நின்றனர். இஃது இவர் ஆங்காங்குப் பாடும் 'இவ் வுலகவாழ்வை ஒரு சொப்பனத்திலும் வேண்டிலேன்', 'கண்மூடிமௌனியாகித்தனியே இருப்பதற்கெண்ணினேன், என் எண்ணமிது சாமி நீ அறியாததோ', 'சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச் சும்மா இருக்க வருளாய்' என்னும் உருக்கமான அடிகளால் தெளியப்படும். இவர் நிட்டைகூடி உண்மையினைத் தேர்ந்து தெளிந்தார் என்பதும் இவர் பாடியருளிய சில பாடல்களால் விளங்குகின்றது.

இவர், சைவசமயாசிரியர், அருணகிரிநாதர், பட்டினத்தடிகள் முதலினோரை வாயாரப் புகழ்தலும், அவருட் சிலர் பாடல்களின் அருமருந்தன்ன அடிகளை எடுத்துக் காட்டிப் பரவசப்படுதலும், அவர்கள்பால் இவருக்கு இருந்த பேரன்பு இத்துணைத்தென்பதைத் தெரிக்கும். இவர் மெய்கண்டார் பரம்பரையினை மிகவும் பாராட்டி அவர் தம்மையே 'குருவணக்கம்' என்னும் தலைப்பின்கீழ்ப் பாடி வணங்கி யிருப்பதனாலும், பிற ஆசிரியன்மாரை மறந்தும் பாடாமையானும், மௌன குரு வணக்கத்தில் தமது தேசிக சிகாமணியைச் சித்தாந்த சைவ பரமாசிரியராகிய திருமூலர் மரபில் தோன்றினோர் என்று குறிப்பதனானும், ஆண்டாண்டுச் சித்தாந்தப் பொருள்களை விளக்கிச் செல்வதானும் இவர் சைவசித்தாந்த தத்துவத்தைச் சார்ந்த சைவர் என்பது பொள்ளெனத் தோன்றும்.

இவர் பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை செறிந்தன. வடமொழியிலுள்ள வழக்கச் சொற்களைத் தமிழாகத் திரிக்காது இவர் அவ்வவ்வாறே தம் பாட்டில் எடுத்தாளுகிறார். இவர் மூவாது

பாடலைச் சிறப்பிக்கப் புகுந்து 'மொழிக்குமொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ் கேட்டுந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பிய சொல் முற்றுமோதான்' என்று கூறிய வனப்பு மிகப் பொலிந்து காட்டுகின்றது. இவர் சிவாநுபூதிச் செல்வர் என்பது இவர் 'சைவ சமயம் சமயமெனி லச்சமயத் தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில், மைவனப் புயல் கொண்டல்காள் பெய்ம்மின் மழை' என்னும் திருப் பாசுரத்தைப் பாடி மழைபெய்வித்தமையான் உணரலாம்.

இவர் மாணுக்கர் கேடிலியப்பப் பிள்ளை என்பவர். இவர் தம் ஆசிரியரைக் குறித்துப் பாடிய அகவல் ஒன்றுளது. அதனுள் இவர் வரலாறு யாதும் குறிக்கப்படவில்லை. இவர் இற்றைக்குச் சற்றேறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்னர்த் திகழ்ந்தனர். இவர் மடம் ஒன்று திரிசிராமலையில் உளது. இன்றும் தலயாத்திரை செய்யும் பல அன்பர்கள் அம்மடத்தைச் சேர்ந்து இவரது சமாதியைக் கண்டு தொழுது வருகின்றனர். இவரது பாடல்கள் நம் தமிழ் மொழிக்கணுள்ள சமய சம்பந்தமான தோத்திர நூல்களுள் ஒன்றாக வைத்து எண்ணப்படும் பெருமை யாவும் ஒருங்கே உடையன.

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

---

# தத்துவ ஆராய்ச்சி

---

பாராதி விண்ணனைத்து நீயாச் சிந்தை
  பரியமடலால் எழுதிப் பார்த்துப் பார்த்து,
'வாராயோ வென்பிராண நாதா' வென்பேன்,
  வளைத்துவளைத்து எனைநீயா வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன்று அறியா வண்ணம்
  புண்ணுளர் போனெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர்சோர
  நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்பேன். 1

ஆயுமறி வாகியுன்னைப் பிரியா வண்ணம்
  அணைந்துசுகம் பெற்றவன்பர் 'ஐயோ' வென்னத்
தீயகொலைச் சமயத்துஞ் செல்லச் சிந்தை
  தெளிந்திடவுஞ் சமாதானஞ் செய்வேன்; வாழ்வான்
காயிலைபுன் சருகாதி யருந்தக் கானம்
  கடன்மலை யெங்கேயெனவுங் கவலை யாவேன்;
வாயில்குப்பம் போற்கிடந்து புரள்வேன்; வானின்
  மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே. 2

'நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
நித்தம்வர வுங்களையிந் நிலைக்கே வைத்தார்
ஆரே? அங்கு அவர்பெருமை என்னே?' என்பேன் ;
'அடிக்கின்ற காற்றே! நீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய்?' என்பேன் ; 'வந்து
பெய்கின்ற முகில்காள்' எம் பெருமான் உம்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யுஞ்
சாதகமென்னே? கருதிச் சாற்றும்' என்பேன். 3

'கருதரிய விண்ணே! நீ யெங்கு மாகிக்
கலந்தனையே யுன்முடிவின் காட்சி யாக
வருபொருளைப் படியிருக்குஞ் சொல்லாய்?' என்பேன் ;
'மண்ணே! உன் முடிவில் எது வயங்கும்? ஆங்கே
துரியவறி வுடைச்சேடன் ஈற்றின் உண்மை
சொல்லானோ? சொல்' என்பேன் 'சுருதி யேநீ
ஒருவரைப்போ லனைவருக்கு முண்மை யாம் உன்
உரையன்றோ? உன்முடிவை உரைநீ' யென்பேன். 4

'உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
யொலிக்கின்ற கடலே! இவ் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தார் யாரே?' என்பேன் ;
'கானகத்திற் பைங்கிளிகாள்! கமல மேவும்
வரிசிறைவண் டினங்காள்! ஓதிமங்காள்! தூது
மார்க்க மன்றோ நீங்கள் இது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண்டோ? ஒருகாற் பேசும்' என்பேன். 5

தாயுமானவர்.

---

# கோநாயும் ஆட்டுக்குட்டியும்

---

தாமரை குவளை அல்லி தழைத்திடும் ஓடை யொன்றில்
தோமுறு கோநா யொன்று துறையினில் நின்றே தெண்ணீர்
ஏமுறப் பருகுங் காலை எளியதோர் ஆட்டுக் குட்டி
நாமுறச் சென்றே யங்கண் நாயினைக் கண்டே அஞ்சி. 1

கூரிய கோநாய் நின்ற துறையினுக் கயலே கீழ்பால்
நேரிய நன்னீர் தன்னை நடுங்கியே யுண்ணுங் காலை
காரிய மிக்க கோநாய் கண்ட அவ் வாட்டைச் சீறிக்
'கோரிய தென்னை? நீரைக் கலக்கினை கொழுப்புக் கொண்டு' 2

உன்னுடை சிறுமை யொன்றும் உணர்கிலை ; உணரா யாயின்
என்னுடை பெருமை தன்னை யுணர்ந்துமென் எண்ணாய் ; பேதாய்,
முன்னுடை அகந்தை தன்னில் முழுகியே யுள்ளாய் ; பாரில்
என்னுடை ஆண்மை சற்றே காட்டுவேன் இப்போ' தென்று. 3

கூறியே கோநாய் ஆட்டைக் குறுகிட, வாடும் ஆடு
'தேறியே செய்தே னில்லை ; சிறியனேன் தேவரீரை
மீறியே செய்யேன் ; உண்ட மிச்சிலை நுகர்ந்தேன்' என்றே
ஏறியே செல்லக் கண்ட கோநாயும் எதிர்த்துச் சென்று. 4

'நில்லுநில் ; நெடிய காலா, நிகழ்த்திய தென்னை ? நீயே
சொல்லுசொல் ;' என்ற தட்டி மீசையுந் துடிக்க, வாயில்
பல்லினை இலங்கக் காட்டப் பார்த்திடும் ஆட்டுக் குட்டி
புல்லிய கரங்கள் கூப்பிப் புகன்றிடும் பொல்லா நாய்க்கே. 5

'ஐயனே ! அடியேன் ஒன்றும் அறிகிலேன் ; அந்தோ நீரை
மெய்யதே கலக்க வில்லை ; மேலொன்றுஞ் செய்ய வில்லை ;
உய்யவே சிறுவன் செல்ல உத்தரம் அளிப்பீ ராயின்
பையவே சென்றென் வீட்டில் பார்த்திடு வேன்பெற் றோரை.' 6

என்றதைக் கேட்ட கோநாய் 'இன்றுநீ செய்தாய் இல்லை ;
ஒன்றிய வோராண் டின்முன் உண்மையாய்த் தீமை செய்தாய் ;
என்றுநீ கிட்டுவாய் என் றிருந்தனன் எதிர்ப் பட்டா யின்(று) ;
அன்றுநீ செய்த குற்றம் ஆர்செய்வார்!' என வுரைப்ப. 7

கேட்டதும் ஆடு கீழே வீழ்ந்து முன் முழங்கா லிட்டு
'நாட்டினில் நான்பிறந்து நான்குமா தந்தான் ஆச்சு ;
காட்டிய பழிக்கு நான் என் கழறுவேன்' என்ன, கோநாய்
'நாட்டிய பழியை உன்றன் தந்தையே நன்று செய்தான் ; 8

தந்தையும் செய்தா னில்லை என்றுநீ சாற்று வாயேல்,
தந்தைக்குத் தந்தை யென்பேன் தருக்குனக் கென்ன ? உன்வாய்
வந்தன பேசுகின்றாய்' என்றுமேல் வீழ்ந்தவ் வாட்டை
முந்துறக் கொன்றே யுண்டு மூர்க்கநாய் ஒழிந்த தன்றே. 9

உளத்தொரு கருத்துக் கொண்டே உலகினர் காணு மாறு
வளத்தினில் வேறு சொற்கள் வகுத்துக்கா ரணம்போற் கூறும்
உளத்தினிற் கொடியோர் செய்கை உத்தம ஆட்டைக் கொன்ற
குளத்தினிற் கோநாய் செய்கைக்(கு) ஒப்பெனக் கூறலாமே. 10

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

# இறைவன் செயல்

தண்ணளியே! விண்ணமுதே! கனியே! பாகே!
தனிப்பொருளே! சுகக்கடலே! எனவே அன்பர்
கண்ணருவி பொழிந்தேத்தும் கயிலை நாதா!
கருதரிய நின் செயலைக் கழறற் பாற்றோ?
'புண்ணியம் ஏது' என்பார்க்குப் பொருளும் ஈவாய்;
புதைகாத்த பேய்க்குணமும் பொருந்தச் செய்வாய்;
'நண்ணிடுமோ நல்லறம்' என் றேங்கு வோர்க்கே
நனிதுயரம் பிணிவறுமை யுறவே செய்வாய். 1

எளியோர்கட் கிரங்கியருள் புரியுந் தேவே!
ஈரம் இலார் புரிபூசை கொள்ளாக் கோவே!
களிமாந்திக் கொடுமைபுரி கயவர் தம்மைக்
களித்துலவக் குவலயத்தே நிலவ வைப்பாய்;
அளிவாய்மை அன்பின்சொல் அமையப் பெற்றோர்
அரைநொடியில் அவனியைவிட் டேகச் செய்வாய்;
ஒளியாதே உரைத்திடுவாய் கருத்தென் னேதான்?
உத்தமனே! இவ்வணம் நீ புரிதற் கந்தோ! 2

மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்.
தமிழ்ப் புலவர்,
சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்தர பாடசாலை.

# ஆன்ம வுண்மை

ஆன்மா என்ற மொழிக்கு வியாபகம் என்பதும், சித்தசித்து என்பதும் பொருளாகும். ஆன்மா சித்தோடு கூடில் சித்தாகவும், அசித்தோடு கூடில் அசித்தாகவும் விளங்கும். இதனைக் குறித்து மக்கள் இனிது உணர்தல் வேண்டும். இதன் உண்மையை அறிதற்குத் திறனற்றுத் தம் சிற்றறிவினைப் பெரிதெனக் கருதி மகிழ்வுற்று அஃதில்லை யெனக் கூறுவர் ஒரு பாலார். இவரது குறுகிய அறிவிற்கும் நுண்ணுணர் வின்மைக்கும் யாம் சாலவும் வருந்துகின்றோம். இவர் இறைவனும் இல்லையெனக் கூறி இறுமாப்புறுவர். இவர் கூற்று பொய்க்கூற்றென்பதை விளக்கிக் காட்டுவாம்.

ஆன்மா என்பது ஒன்று இல்லையாயின், அம்மொழி எங்ஙனம் பிறந்தது? ஏன் பிறந்தது?' என்னும் வினாக்களுக்கு அவர் இறுக்கும் விடைகள் யாவை? ஆன்மா இல்லையெனக் கூறுபவர் உண்மையினாலேயே, அஃது உண்டெனப் பெறப்படும். இஃது யாங்ஙனம்

பொருந்தும்? அற்றேல் முயலுக்குக் கோடில்லை யெனக் கூறின், அதற்குக் கோடுண்டெனப் பெறப்படுமோ?' எனச் சிலர் ஐயுறலாம். அற்றன்று. முயல் என்னும் விலங்கினையும், கோடு என்னும் பொருளினையும் மக்கள் அறிந்துள்ளார். ஆனால், முயலினிடத்துக் கோடிருத்தலைத்தான் அவர் கண்டிலர். ஆதலான், ஆன்மா இல்லையெனக் கூறுதல் அப்பெற்றித்தன்று. இதனான், அவர் கூற்றுத் தவறுதல் காண்க. இங்ஙனம் ஆன்மா இல்லையெனப் பகர்வார் மிகச் சிலரே. இவர்கட்கு இறைவனே நல்லறிவு கொளுத்தி நலன் நல்குவனாக.

இனி, ஆன்மா உண்டென நம்புவோர்களில் பலர் அதனைப் பலவாறாகப் பிறழ உணர்வர். தேகமே எல்லாத் தொழில்களையும் இயற்றுதலினாலே, அதுவே ஆன்மாவாக இருத்தல் வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். இது சிறிதும் பொருந்தாது. என்னை யெனின், எனது உடல், எனது கை, எனது கால் என நாம் பிரித்துக் கூறுதலினாலே, தேகத்தின் வேறாக ஒரு பொருள் உளதெனத் தெள்ளிதின் உணரற்பாற்று. ஆனால், நான் பருத்தேன், நான் இளைத்தேன் எனக் கூறும்வழி, பருத்தலும், இளைத்தலும் தேகத்திற்கே உரியனவா யிருத்தலின், தேகமே ஆன்மா என அவர்கள் மொழிதல்கூடும். இதுவும் பொருந்தாது. எங்ஙனம் எனின், யான் கை, யான் கால், யான் தேகம் என நாம் கூறுதலுண்டோ? இல்லை. ஆதலான், தேகம் ஆன்மா அன்று.

சிலர் ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றையே தனித்தனி ஆன்மா எனக் கூறல் பொருத்த முடைத்து என்பர். இதுவும் தவறே. கண் ஒரு பொருளை நோக்குகின்றது, செவி ஒரு சத்தத்தைக் கேட்கின்றது. கண் ஒன்றே ஒரு பொருளை நோக்கவும், ஒரு சத்தத்தைக் கேட்கவும் கூடுமோ? கூடாது. கண் இயற்றும் தொழிலினைச் செவி இயற்றுதல் ஆகாது அங்ஙனமே செவி இயற்றும் தொழிலினைக் கண் இயற்றுதல் ஆகாது. ஏனைய புலன்களும் ஒன்றன் தொழிலை ஒன்று இயற்றுதல் ஆகாது. இவ்வைம்புலன்கள் மாட்டும் வேறு ஒரு பொருள் நின்று அவற்றின் தொழில்களை இயற்றுகின்றது எனத் தெளிவாகின்றது. ஆதலான், ஐம்புலன்கள் தனித்தனி ஆன்மா அன்று என்பது பெறப்பட்டது.

சிலர் சூக்கும தேகம் ஆன்மா என உரைப்பர். சூக்கும தேகம் தூல தேகத்திற்குள் இருப்பது. அதுவே ஐம்புலன்களின் தொழில்களையும் இயற்றுகின்றது என்பது அவர் கருத்தாகும். இதுவும் தவறு. எங்ஙனம் எனின், நாம் கனவு காண்கையில், பல தொழில்கள் நிகழ்வனவாக நமக்குத் தோன்றுகின்றது. ஆனால், நாம் விழித்துக்கொள்கையில், அத்தொழில்களைப் பிறழவும உணர்கின்றோம், சிலவற்றை மறக்கவும் மறக்கின்றோம். சூக்குமதேகமே ஆன்மாவாக இருத்தல் உண்மையாயின், இங்ஙனம் மறத்தலும், பிறழ உணர்தலும் நிகழமாட்டா. அஃது எஞ்ஞான்றும் ஒரே தன்மையாக இருக்

கும். ஆதலான், சூக்கும தேகத்திற்கு வேறாக ஒரு பொருள் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. அவ்வேறாகிய பொருள் சில தத்துவங்களை விட்டு அகத்துச் செல்லுதலும், விட்ட அத்தத்துவங்களோடு கூடிப் புறத்துச் செல்லுதலும் சுபாவமாகப் பெற்றுளது. ஆதலான், சூக்குமதேகம் ஆன்மா அன்று.

சிலர், அந்தக்கரணங்களாகிய சித்தம், மனம், அகங்காரம், புத்தி இவையே தனித்தனி ஆன்மா எனக் கூறுகின்றனர். இதுவும் தவறு. அந்தக்கரணம் என்னும் சொற்றொடருக்கு அகத்தேயுள்ள கருவி என்பது பொருளாகும். சித்தம் என்பது யாதோ ஒரு பொருள் பிண்டமாகத் தோன்றுகின்றது என அறியும்; மனம் என்பது அப்பொருள் கட்டையோ மகனோ என ஆசங்கை கொள்ளும். அகங்காரம் கட்டையா மகனா என நிச்சயிக்கப்படாத அப்பொருளைத் தானே தவறாகக் கட்டை யென்றேனும் மகனென்றேனும் நிச்சயித்துக்கொண்டு இறுமாப்புறும். புத்தி அப்பொருள் கட்டைதான் எனச் சரியாக நிச்சயித்து அறியும். இவ் வந்தக்கரணங்கள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி வரையுந்தான் தொழிற்படும். அவை துரியம், துரியாதீதங்களில் தொழிற்படமாட்டா. நாம் ஒரு பொருளை நம்மை அறியாமல் கீழே நழுவவிட்டு விட்டதாகப் பாவித்துக்கொள்வோம். நாம் பொருளை விட்டுவிட்டுச் சிறிது தூரம் சென்றதாகவும் பாவிப்போம். பின்னர் நாம் திடுக்கெனப் பொருள் விழுந்துவிட்டதென அறிவதாகப் பாவிப்போம். அதுபோழ்து நமக்கு என்ன மெய்ப்பாடு நிகழ்கின்றது? நாம் பிராணவாயு இயக்கமேயின்றி மூர்ச்சை அடைகின்றோம். இந்த நிலைக்குத்தான் துரியாதீதம் என்று பெயர். பின்னர்ச் சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்து சற்றே பிராணவாயு இயங்கும். இந்த நிலைக்குத்தான் துரியம் என்று பெயர். பின்னர் அப்பொருள் எவ்விடத்து விழுந்ததோ என எண்ணுகின்ற நிலைக்குச் சுழுத்தி என்று பெயர். பின்னர் விழுந்தவிடம் இதுவோ அதுவோ என எண்ணுகின்ற நிலைக்குச் சொப்பனம் என்று பெயர். பின்னர் விழுந்த விடத்தை நிச்சயித்துப் பொருளைக் கண்டெடுக்கும் நிலைக்குச் சாக்கிரம் என்று பெயர். இனி அந்தக்கரணங்கள் தனித்தனி ஆன்மா ஆகமாட்டா என்பதை ஓர் உதாரண முகத்தான் விளக்கிக் காட்டுவாம்.

நாம் ஏதோ ஒரு விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில், நம் கண்ணெதிரே நம் உற்றார் ஒருவர் வெளியூரிலிருந்து வந்தபோதிலும், நாம் அவரை இன்னார் என அறிவதேயில்லை. ஒரு மனிதன் நம் எதிரே நிற்பதாகவும் நமக்குத் தெரியாமல் இருப்பதுண்டு. இதனால் என்ன அறியக்கிடக்கின்றதெனின், மனமானது சிந்திக்கும் தொழிலை இயற்றுங்கால், கண்ணின் தொழிலாகிய நோக்குதலை அதனாற் செய்ய முடியாமற் போயிற்று. மனம் ஆன்மாவாக இருக்குமாயின் அங்ஙனம் நிகழ்ச்சி உண்டாகாது. மனத்திற்கு

வேறாகிய ஒரு பொருள் (அதாவது ஆன்மா) மனத்தோடு கூட, மனம் கண்ணோடு கூட, வந்த உறவினர் இன்னர் எனத் தெரியவருகின்றது. ஆதலான், மனத்திற்கு வேறாக ஒரு பொருள் உண்டு என்பது தெளிவாகிறது. இவ்வாறே ஏனைய சித்தம், அகங்காரம், புத்தி என்னும் அந்தக்கரணங்களும் தாமே தொழிற்படமாட்டா. ஆதலான், அந்தக்கரணங்கள் தனித்தனி ஆன்மா ஆகமாட்டா என்பது வெளிப்படை.

சிலர் கடவுளே ஆன்மா என மொழிகின்றனர். இதைக்காட்டினும் பெருந்தவறு வேறில்லை. கடவுளே ஆன்மா என்பது உண்மையாயின், ஏன் நாம் விஷயங்களை நூன் முகத்தானும், குரு முகத்தானும் அறிதல் வேண்டும்? நாமே எல்லா விஷயங்களையும் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும் அன்றோ? கடவுளே ஒரு நூலும், ஒரு குருவும் தேடுதல் வேண்டும் எனக் கூறுதல் எத்துணைப் பேதமையாகும். ஆன்மாவானது ஒரு விஷயத்தைப் பலவாறு பிறழ உணரும். அன்றியும், அது சாக்கிரம், சுழுத்தி, சொப்பனம், துரியம், துரியாதீதம் முதலிய ஐந்து அவத்தைகளை அனுபவிக்கையில், ஒரு அவத்தையில் அனுபவித்ததைப் பிறிதொரு அவத்தையில் அறியமாட்டாது. இங்ஙனம் மாறுபடும் உணர்ச்சியும், மறப்புமோ பெற்றிருப்பன் இறைவன்? அவனே குருவையும், நூலையும் வேண்டுபவன்? ஆதலால், இறைவன் ஒரு காலத்தும் ஆன்மா ஆகமாட்டான். ஆனால், இந்நிலவுலகில் பெரும்பாலார் இத்தகைய கொள்கை பெற்றிருத்தற்குக் காரணம் யாதென நீங்கள் ஐயுறலாம். அவர்கள் புத்தி தத்துவங்கள் எத்துணைத் தூரம் செல்லக்கூடுமோ அத்துணைத் தூரம் சென்று விஷயங்களை முடிவுகட்டுகையில், அவை சிற்றறிவே உடைமையால் அதற்கு மேற்செல்லும் திறன் இன்றி அவர்களை அங்ஙனம் பிறழ உணரச் செய்தனவே யன்றி வேறல்ல. இவ்விஷயம் விரிக்கிற் பெருகும். இவ்வுலகில் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆன்மகோடிகள் உளவாயிருத்தலைக் கண்டும், அன்பர்கள் கடவுள் ஆன்மா என ஒருகாலத்தும் கனவிலுங் கருதார்களென்னும் நிச்சயத்துடன் இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்துகின்றேன்.

இதுகாறும் கூறியவாற்றால், ஆன்மா என்பது ஒன்று உண்டு என்றும், அது தேகம், ஐம்புலன்கள், சூக்குமதேகம், பிராணவாயு, அந்தக்கரணங்கள் இவை அன்று என்றும், அது கடவுள் ஆகமாட்டாது என்றும் நன்கு தெளிவாயிற்று. அது தேகத்துள் வியாபித்து நின்று, எல்லாத் தொழில்களையும் இயற்றிக்கொண்டு, அதி நுட்பமாக விளங்குகின்றது.

தமிழ்ப்புலவர்
மணி. திருஞானசம்பந்த முதலியார்,
பத்திராசிரியர்.

# மக்கட்பிறவி

(தொடர்ச்சி)

கற்குந்தோறும் அறிவுவளர்தல் மணற்கேணியைத் தோண்டுந் தோறும் நீர் ஊறல் போலும். கல்லாதார் அறிவு விளக்கம் பெறுமையின் விலங்கொடு சேர்த்தே எண்ணப்படுவர். இனி, 'கல்வி' எனும் சொல்லானது 'கல்' எனும் முதனிலை வினையினடியாகப் பிறந்த தொன்றும். அம் முதனிலைக்குப் பொருள் 'தோண்டு' என்பதாம். ஆகவே 'கல்வி' எனும் சொல்லானது இயற்கையின் உண்மையை ஆழ்ந்து அறிதல் என்னும் பொருளது. ("தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்னு மிடத்துத் 'தொடு' எனும் சொல்லையே ஆண்டு உவமை கூறிய அழகு காண்க.) அவ்வாறு ஆராய்தல், புதுமையாக மக்கட் பிறவி பெற்ற உயிர்கட்கு அறிவு அத்துணை விளக்கமின்மையின் ஒவ்வாது. ஆகவே அறிவுடையோராற் சொல்லப்பட்டவற்றைக் கற்றல் வேண்டுமென்பது. இக் குறிப்பானன்றே மக்களுயிர்க்கு உண்மையைத் தெள்ளிதின் விளக்கத் தோன்றிய 'பொய்யாமொழிப் புலவர்' எனும் பெயர்பெற்ற திருவள்ளுவனாரும் தாம் அருளிய அரிய நூற்கண் பாயிரவியலில் முதலிற் கடவுள் வாழ்த்துக் கூறிப் பின்னர் வான் சிறப்புக் கூறி அதன்மேல் 'நீத்தார் பெருமை' கூறிப் பின்னரே அறன் வலியுறுத்தல் முதலாயின அருள்வாராயினர். நீத்தாராவார் உலகியலை நன்கறிந்து மெய்ந் நெறிக்கண் ஒழுகுவார். அன்னோராற் சொல்லப்பட்டவற்றை ஆராய்தல் மக்களுயிர்க்கு இன்றியமையாதது என்னும் பொருள்பட வன்றே தமிழ் மறையும் "கற்க கசடறக் கற்பவை கற்றபின்—நிற்க வதற்குத்தக" என வியங்கோட் பொருளிற் பகர்வதாயிற்று. கற்குங்கால் ஐயம், திரிபு முதலிய குற்றங்களின்றிக் கற்றல் வேண்டும். ஐயமாவது பொருளின் உண்மையை உள்ளவாறறியாது மயங்கல். திரிபாவது மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் உணர்தல். கசடறக் கற்பினும் கற்ற நெறிக்கண் நிற்றல் வேண்டும். அவ்வாறு நிற்றலாவது தாம் கற்றவற்றை உலகியலோடு பொருந்தப் பார்த்தல். அவ்வாறு பாராக்கால் கற்றும் அறிவு வளராமை, மருந்துண்டானொருவன் அம்மருந்தின் றன்மைக்குத் தக்கவாறு உணவு செயல்களைக் கொள்ளாக்கால் அம் மருந்து பிணிதீர்க்காது பயன்தராது ஒழிவது போலும்.

அவ்வாறு கற்ற நெறிக்கண் நின்று பார்க்குங்கால், மக்களாய்ப் பிறந்தார் பெறும் பெரும்பொருள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கே என்பது பெறப்படுகின்றது. அவற்றுள் அறமாவது ஆன்றோர் வரையறுத்துச் சொல்லிய நெறிக்கண் ஒழுகலாம். அவ்வாறு அவர்கள் சொல்லியதும் பலதிறப் படினும் நுண்ணி

தின் ஆராய்வார்க்கு மனத்துக்கண் மாசிலனாதலே அறம் என்பது விளங்கும். மனம் உணர்தற்கருவி. ஆகவே மனம் குற்றமில்லாததாயின், மாசுற்றதொரு பளிங்கு மாசற்றக்கால் தன்னைச் சேர்ந்ததோர் பொருளின் இயல்பை உள்ளவாறு விளக்குவது. உண்மையின் அறநெறி ஒழுகுவார்க்கு "மனத்துக்கண் மாசிலனாத லனைதற—னாகுலநீரபிற" "அழுக்காறவா வெகுளி யின்னாச்சொன்னான்கு மிழுக்கா வியன்றதறம்" எனும் அருமொழிகளே அமையும்.

பொருளாவது உலகியல் நடைபெறுதற் கெனப் பெரியோரால் செய்துகொள்ளப்பட்டதோர் ஏற்பாடு. இப்பொருள் இல்லையேல் உலகத்து உயிர்கள் உணவு முதலியவின்றித் தடுமாறும். 'மற்றும் செய்தொழில்களும் செம்மையாக நடைபெறா. இவ்வாறு உயிர்கள் பேரிடரெய்தும். இதனை "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான்முடியும்", "பொருளிலார்க் கிவ்வுலகமில்லாகியாங்கு" எனும் திருவாக்குகளாளறிக. இப் பொருள் நெறிநிற்பார் "அறனீனும் மின்பமுமீனுந் திறனறிந்து—தீதின்றி வந்தபொருள்", "காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு—மன்ன நீரார்க்கேயுள" எனும் அருமொழிகளைக் கடைப்பிடிக்க.

இன்பமாவது மனத்தினுக்கு மகிழ்தருவது. ஈண்டு இன்பம் என்றது உயிர் உடலோடு கூடியிருக்குமளவும் நுகரு மின்பத்தினை. அவ்வாறு நுகரப்படு மின்பம் பலவாயினும் சிற்றின்பமாகிய காம இன்பமே ஈண்டு இன்பமெனப்பட்டது. இவ்வுலக இன்பங்களுள் அதற்கு மேலானதொன்று இன்மையின். ஈண்டுச் சிறுமை நுண்மை மேற்று. அஃதாவது துய்த்தாலன்றி இன்ன தன்மைத்தென ஒருவராலும் உணரப்படாததாயும், அவ்வாறு துய்க்குங்காலும் இமைப்பொழுதிற் றோன்றி மறைவதாயு மிருப்பது. மற்றும் ஐம்பொறிகளும் மனமும் ஒன்றுபட்டுத் துய்க்குமின்பம் இஃதொன்றுமே. இத்துணை நுண்ணிதாயிருத்தலின் இச் சிற்றின்பத்தினை நந்தாமொழியாந் தனித் தமிழ் மொழிவாணர் 'அகப்பொருள்' என்பர். இவ்வகப்பொருளின் இலக்கணத்தைத் 'தொல்காப்பியம்' 'இறையனாரகப்பொருள்', 'திருக்கோவையார்', 'திருக்குறள்' முதலிய நூல்களிற் காண்க. இவ் வின்பத்தால் எத்துணை அறிவிற் சிறந்தாரும் கட்டுண்ணப்படுகின்றார்களெனின் இதன் பெருமையை என்னென்பது! இன்னதோர் இன்பத்தினை இறைவன் உலகில் உயிர்கட்குப் பிறவி கொடுத்து ஆட்கொள்ள வைத்தனன்போலும். இவ்வின்பம் உயிர்கட்கு இயற்கையிற் றோன்று மின்பம். உண்மையின் நோக்குவார்க்கு இவ் வின்பம் யாதினின்றும் பெறப்படுகின்றதோ அது மிகுதியும் இழிபொருள் என்பது நன்கு விளங்கும். ஆயினும் நன்கு துய்த்தாலன்றி அவ்வாறு தோன்றாது. ஆதலின் ஒவ்வொருவரும் இவ்வின்பத்தைத் துய்த்தே கழித்தல் வேண்டுமென்பது. இதனானன்றே அறிவிற் சிறந்த பெரியோரெல்லாம் மக்களுயிர்க்கு இல்லறநெறியை

இன்றியமையாத தொன்றாக வைத்தனர். இவ்வின்பம் விழைவார் "அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்—புறத்த புகழுமில" எனும் பெருமொழியை மேற்கொள்க.

வீடு எனும் சொல் 'விடு' எனும் முதனிலை திரிந்தசொல். ஆகவே அச்சொல் 'பிறப்பினின்றும் விடுபட்டோர் சேரிடம்' என்னும் பொருள்தரும். இவ் வீட்டின்பம், துய்த்தாலன்றி ஒருவரா லுணரப்படாததாயும், என்றும் ஒரே படித்தாயும் விளங்கும். இவ் வீட்டின்பமே மக்களுயிர்க்குப் பேரின்பம். மேற்கூறிய முப்பொருள் களினும் ஈடுபட்ட உயிர்கட்கு அவற்றின் உண்மையா னின்பமும் இன்மையாற் றுன்பமும் தோன்ற உவர்ப்புண்டாம். உண்டாக உயிர் உண்மையுணர்ந்து வீடுபெறும். இதனை "ஆராவியற்கை யவா நீப்பி னந்நிலையே பேரா வியற்கைதரும்" எனும் தமிழ்மறையா னறிக.

மேற்பொருள் நான்கனுள் அறநெறியை முதற்கண் கூறிய முறை கடைப்பிடிக்க. அறநெறி யுண்டாகவே பொருளின்பங்களும் அவற்றின் மேலதாகிய பேரின்பமாம் வீட்டின்பமும் உண்டாமென் பது. இதனனன்றே "சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்—காக்க மெவனோ வுயிர்க்கு" என்னும் திருவாக்கு மெழுந்தது. அன்னதோர் அறநெறியும் சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய உயிர் கட்குப் பேரறிவும் பெருந்தொழிலுமுடைய இறைவ னருளிலார்க்கு நன்கு விளங்காது. இதனை "நின்னருட் கண்ணால் நோக்காதாரல்லா தாரே" "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" எனும் அருந் திருவாக்குகளானறிக. ஆதலின் இறைவனருளை நாடல் வேண்டும். அவ்வாறு இறைவனருளை நாடின் மேற்பொருள் நான்கும் நன்கு கூடுமென்னுங் கருத்துப்படவே நாயனாரும் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ—னற்றா டொழாஅரெனின்" என அருள்வாராயினர். இவ்வாறே திருநாவுக்கரசு சுவாமிகளும் "வேத மோதிலென் சாத்திரங் கேட்கிலென்—நீதிநூல் பல நித்தல் பயிற்றிலென்—ஓதியங்கமோராறு முணரிலென்—ஈசனை யுள்குவார்க்கன்றி யில்லையே" என அருள்வார். மற்றும் மக்கட்பெரும் பயன் கூற வேண்டிப் பிறண்டும் "பூக்கைக்கொண்டரன் பொன்னடி போற்றிலார்—நாக்கைக்கொண்டரனும நவில்கிலார்—ஆக்கைக்கே யிரைதேடி யலமந்து—காக்கைக்கே யிரையாகிக் கழிவதே" எனத் தோற்போர்வை மேலும் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும் மீப்போர்வை மாட்சித்தாயும், நீரில் எழுத்துப்போல் அழிந்தொழிவதாயும் உள்ள யாக்கையையே பெரிதும் போற்றி யொழியும் அறிவின் மக்களைப் பார்த்து இரங்கிக் கூறி அருள்வாராயினர்.

பிறவிப் பெரும்பயன்வா லறிவனற்றாள் தொழுதலெனவே உயிர்களிடத்தும் அன்புடையராதல் வேண்டும் என்பது பெறப் படும். இறைவன் எல்லாப் பொருள்களினும் தங்குபவனாதலின்

உயிர்களிடத்து அன்பில்லாமையாற் செய்யப்படு துன்பம் இறைவனு லறியப்படுதலின் உயிர்களிடத்து அன்பிலாதார் இறைவனிடத்தும் அன்பிலாதவரே. ஆதலினன்றே "அருளிலார்க் கவ்வுலகமில்லை" எனவும் "எவ்வுயிரு நீங்கா துறையு மிறைசிவனென்—றெவ்வுயிர்க்கு மன்பாயிரு" எனவும் பொறிவாயிலைந் தவித்தான் பொய்தீரொழுக்க நெறிநின்ற பெரியோரெல்லாம் அருள்வாராயினர்.

மக்களறிவின் பேரழகு பிறவுயிர்களிடத்து அருளுடையராய் அவற்றிற்குத் தக்க நன்றியாற்றுதலே என்றுணர்ந்து, பொருளல்ல வற்றைப் பொருளென்றுணரும் மருளறுத்த பெரியோராகிய திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலியோர் தாமும் இறைவன் பொருள்சேர் புகழே இடைவிடாது புரிதலோடு ஏனைய உயிர்களும் அவ்வாறு புரிந்து இன்புறவேண்டு மென்றன்றே பலவிடங்களினும் சென்று இறைவனைப் பாடுமுகத்தால் உயிர்கட்கும் நல்லறிவுச் சுடர் கொளுத்துவாராயினர். இவ்வாறான பெரியோரின் அருட்டிறம் என்னே! என்னே!!

முடிபாக மக்கள் பெறும் பெரும்பயன், "தவஞ்செய்வார் தங் கருமஞ்செய்வார் மற்றல்லார் அவஞ்செய்வார் ஆசையுட்பட்டு" என்றபடி தவமாகிய பயனேயாம். தவமாவது தமக்குற்ற நோய் பொறுத்தலும், உயிர்க்கு உறுகண் செய்யாமையுமேயாம். "உற்ற நோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை—யற்றே தவத்திற் குரு" என்னும் அருமறை மொழி ஒவ்வோர் மக்களிடத்தும் சிலையி லெழுத்தேபோல் நிலைபெறுவதாக.

இதுகாறும் கூறியவாற்றால், உயிர்கட்கு அறிவு விளக்கம் வேண்டியே இறைவனாற் பிறவி யருளப்பட்டதென்பதூஉம், அவ் வாறான பிறவிகளுள் மக்கட்பிறவி ஆறறிவுடைமையிற் சிறந்ததாயிற் றென்பதூஉம், மக்களறிவு வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாத தென்பதூஉம், கற்றநெறிக்கண்ணே ஒழுகல் வேண்டுமென்பதூஉம், அவ்வாறு ஒழுகலாவது கடவுளைத் தொழுது பிறவுயிர்களிடத்து அன்புடையராய்த் தத்தம்மால் இயன்றதோர் நன்றியாற்றலே வேண்டுமென்பதூஉம், அவ்வாறு செய்தலே மக்கட்பிறவியாற் பெறும் பெரும்பயனென்பதூஉம் பெறப்படுகின்றன.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நாமும் பெறுதற்கரிய பிரா ணடி பேணிப் பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்பம் பெறுமாறு மலர்மிசை யேகினான் மாணடியை இறைஞ்சுவோமாக.

கீ. சதாசிவ நாயகர்,
முத்தியாலுப்பேட்டை, உயர்தரகலாசாலைத்
தமிழ்ப்புலவர்.

---

# தமிழை வளர்த்தல்

இக் காலத்தில் அறிஞர் சிலர் உண்மை விழைவால் தூண்டப் பட்டுத் தமிழ் மொழியை வளர்க்கப் பெரிதும் முயன்று வருதலைக் கண்டு அகமிக மகிழ்கின்றேம். ஒருவர் இருவர் அங்கும் இங்கும் மூலை முடுக்குகளில் மட்டும் இருப்பின் தமிழ் வளர்ச்சியடைதல் அரிது. பண்டை நல்லூழ் வயத்தான் மிக்க செல்வம் பெற்றுள்ள பொருளாளர் பலர் நம் நாட்டில் இல்லாமற் போகவில்லை. ஆயிரக் கணக்கான வேலிகளையுடைய மிட்டாதார்களும், திருவின் மிக்க மன்னர்களும், ஜமீன்தாரர்களும் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகித்துள்ள பெருமக்களும் நமது நாட்டகத்தே பலர் உளர். இங்ஙன மிருந்தும் இத்தகையோருள் பெரும் பான்மையோர் மாயையால் கண் மறைப்புண்டு, உண்மை யுடையதும், என்றும் அழியாததும் பழிப்பற்றது மாகிய புகழையும், பின்வரும் நமது கால்வழியாரின் இனிய வாழ்த்தையும், புலவர் பாடும் புண்ணியச் சிறப்பையும் தர வல்லதாகிய தமிழ் மொழியை வளர்க்க எண்ணாது, பூத்த மலர் வீணில் வாடி அழிதல்போல விரையக் கெட்டொழியும் திவான் பஹதூர், இராவ்பஹதூர் முதலிய பட்டங்களுக்குப் பேராவல் கொண்டும், சென்னைச் சட்டசபை, நகர்க்காப்புக்கழகம் முதலியவற் றுக்குச் செல்லுதற்கும் தாமோ அன்றித் தம் முன்னேரோ அரிதிற் றேடிய பொருளைத் திரள் திரளாகக் காற்றில் பறக்கவிடுகின்றனர். அந்தோ! உயர்ந்த அறங்களைக் கைப்பற்றியொழுகின் இத்தகைய பட்டங்கள் தம்மைத் தேடிவருதலோடு இவர்தம் புகழுடம்பும் என்றும் நின்று நிலவுமே. நம்மவர்களுள் கற்றோர் தொகை சாலவும் சிறியது. கல்லாதாரோ பலப் பலர். கற்றோரெனக் குறிக்கப்படுவோ ரும் பெரும்பான்மையும் ஆங்கிலம் கற்றோர். அவர் தம்முள் இறப்ப வும் சிலர் தமிழ் தெரிந்தோர்; அஃதாவது பிழையின்றித் தமிழ் எழுதவும் படிக்கவும் தெரிந்தோர். அவர்களுள் மிகச் சிலரே தமி ழிலே பற்றுடையார். தமிழ்ப் புலவரோ வயிறு வளர்ப்பதையே பெரும் பாரமாகக் கொண்டவர். அவர் தமிழை வளர்த்தல் எவ்வாறு இயலும்? அன்றியும் நமது தமிழ் நாட்டில் மற்றோர் குறையும் உண்டு. அஃதாவது பார்ப்பனருள் பலர் தமிழ் மொழியைத் தமது தாய் மொழியாகப் பயின்றும், புலமையிற் சிறந்து நூலியற்றல், உரையியற்றல், விரிவுரை செய்தல் முதலியவற்றால் பொருளும் புகழும் அடைந்தும் தமிழைப் புறக்கணித்தலும் மொழிச்சிறப்புக் கூறுமிடங்களிலெல்லாம் வடமொழியே தமதெனப் பிறழவுணர்ந்து, அம் மொழியில் எடுத்துக் கூறச் சில வசனங்கள்தாமும் தெரியா விடினும் அதனைப் பாராட்டிக் கூறுதலுமாம். ஆந்திரம், கன்னடம், கேரளம் முதலிய நாட்டிலே வாழும் பிராமணர் அங்ஙனம் செய்யக் கண்டிலம். இதுவும் தமிழுக்கு ஏற்பட்ட ஒரு குறையே.

இஃதிவ்வாறிருப்பத் தமிழ் வளர்ச்சிக்கெனத் தனியாக நிறுவப்பட்ட சில சங்கங்கள் மின்மினி விளக்கம்போல ஆங்காங்குத் தலை காட்டுகின்றன. அன்றியும் சைவசபைகளும் தமிழை ஓராற்றான் வளர்ப்பன வாதலின் அவற்றையும் தமிழ்ச் சங்கங்களெனவே கொள்ளுதல் கூடும். இவற்றின் நிலைமையைச் சிறிது ஆராய்வோம். தமிழ்ச் சங்கங்களுள் பெரியது மதுரைத் தமிழ்ச் சங்கம். இது தமிழுக்குச் செய்யும் வேலை யாது? இதனை ஒரு பட்டத்து யானைக்கு உவமை கூறலாம். இஃது ஆண்டு முழுவதும் விலாப்புடைக்க உண்டு யாதோ ஒருநாள் பவனி வருவதைப் போன்று உளதே அன்றிச் செலவாகும் பொருளுக்குத் தக்க வேலை செய்வதாக எமக்குத் தெரியவில்லை. மாணவர் நிருபம் எழுதினும் பதில் கிடைப்பது அரிதாக உள்ளது. செந்தமிழ்ப் பத்திரிகையிலும் அது தோன்றிய இரண்டொரு ஆண்டுகள் வெளிப்பட்டவாறு சிறந்த பொருள்கள் வெளி வரவில்லை. ஆண்டிருந்து வரும் நிருபங்களும் செவ்வையாக எழுதப்படாமல் சொற்பிழைகள் மலிந்து கிடக்கின்றன. இச் சங்கத்திலே கம்பராமாயணத்திலே பெரும்பற்றுடைய ஐயங்கார்கள் நிறைந்திருந்தும் இதுகாறும் திருத்தமான பதிப்பு ஒன்று வெளிவரவில்லை. இவற்றையெல்லாம் சங்கத்தலைவர்கள் உற்று நோக்காமை பெரிதும் வருந்தற்பாலது. இக்காரணங்களால் இச் சங்கத்தால் தமிழ் மொழிக்கு மிக்க நன்மை விளையுமென்று எண்ணுதற்கு இடமில்லை.

இரண்டாவது படியில் வைக்கவேண்டுவது கரந்தைத் தமிழ்ச் சங்கம். இஃது இன்னும் குழவிப் பருவத்திலுள்ளது. எனினும் இது செய்துவரும் வேலைகளும் உண்மை முயற்சியும் தமிழ் மக்கள் எல்லாரானும் பாராட்டற்பாலன. இது அவ்வப்போது அரசியலாருக்குத் தமிழ் மொழியைப் பற்றிச் செய்யவேண்டிய கடமைகளை எடுத்துரைக்கின்றது. இச் சங்கத்தினின்று சில ஆராய்ச்சி நூல்கள் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. சென்ற ஆண்டு விழாவிற்குத் தலைமைபூண்ட பெருந்திருவாளரும் வள்ளன்மை உடையவரும் ஆண்டிப்பட்டி ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் திவான்பஹதூர் பெத்தாச்சி செட்டியார் அவர்கள் அளித்த நன்கொடை முதலியன கண்டு களிபெருவகை எய்துகின்றோம். இது தமிழுக்குப் பெருநன்மை செய்யும் என்றும் நம்புகின்றோம். இதனைச் சேர்ந்துள்ளவர்களும் இதன் தலைவர் ஸ்ரீமான் உமாமகேசுவரம் பிள்ளை பீ. ஏ. பீ. எல்., அவர்களும் தமிழுக்கு உண்மைத் தொண்டர்கள் ஆதலின் இஃது ஓங்கி வளரும்படி தமிழர் பல்லாண்டு பாடுவாராக.

இனிச் சென்னையிலே இப்போது தோன்றியுள்ள தமிழர் சங்கம் தமிழுக்கும் தமிழருக்கும் அருந்திருப்பணி ஆற்றும் ஆர்வத்துடன் பிறந்த பச்சிளங் குழவியாக உள்ளது.

சைவ சபைகளுள் முதன்மை பெற்றது தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை. அச்சபையினின்று இன்னும் நூல்கள் யாதும் வெளி வரவில்லை. ஏனைத் தமிழ்ச் சங்கங்களும் சைவ சபைகளும் ஆண்டு நிறைவிழாவைப்பெரும் பாடுபட்டு நிறைவேற்றி உறங்குவன. அவை தேமாமரத்தின் உச்சியிலே கனிந்த ஒரு கனியுண்டு மீண்டுந் தவ மேற் செல்லும் முனிவரை ஒப்பத், தவத்திற் கிடந்து ஆண்டுக் கொருமுறை கண் விழித்து, 'ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த ஆராவின்ப அருங்கனி பிழிந்ததன் சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுதருந்தி' மீண்டுந் தவங் கிடப்பன. புலவரைக் கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்தலினாலும், ஆண்டு நிறை விழாக்கள் புரிவதனாலும் பயனில்லை யென்று யாம் சொல்லவில்லை. அவற்றால் விளையும் பயன் உறங்கிக் கிடக்கும் மக்களுக்குச் சிறிது ணர்ச்சி தந்து எழுப்புதலும், ஒன்றும் அறியாது கிடக்கும் மக்க ளுக்குக் கிளர்ச்சியினால் ஏதோ உளது என்று எண்ணும்படி செய்த லுமேயாம். ஆனால், அவை நீடித்த பயன் அன்மையானும் அவற்றி னும் சிறந்த வேலைகள் செய்யவேண்டி யிருத்தலினானும் அவற் றையே கொண்டுள்ள சபைகளால் பெரும் பயனில்லையென்று கூறி னோம்.

இனித் தமிழ் வளர்ச்சிக்கும் சைவ சித்தாந்த போதனைக்கும் ஏற்பட்ட தமிழர் குருபீடங்களாயுள்ள மடங்கள் எங்ஙிலையிலுள்ளன என்று நோக்குவோம். திருவாவடுதுறை மடம் பல நூல்களை இயற்றி யும் மாணவருக்குத் தமிழ் செவியறிவுறுத்தியும் சித்தாந்த சைவ சாத்திரங்களைப் புலங்கொளக் கற்பித்தும் வந்தமையான் 'கல்விக் களஞ்சியம்' என்று போற்றப்பட்டு வந்தது. இப்பொழுதோ நமச் சிவாய சுவாமிகள் குருபூசை ஆடம்பரத்துடன் ஆறுதலடைகின் றது. அவர் குருபூசையாவது சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த சிவஞானபோதபாஷ்யம் வெளிவருதலேயாகும் என்பதை என்று அம்மடத்துக்குரியோர் கருதுவரோ அறியோம். கோயிற்புராணம் அரங்கேற்றப் படாதிருந்தபொழுது நடேசப்பெருமான் தில்லைவா ழந்தணர் கனவிலே தோன்றி 'யாம் உமாபதியின் பெட்டகத்தில் உளோம்' என்று திருவாய் மலர்ந்தருளினர் என்னும் நிகழ்ச்சியின் பயனை மடத்தாருக்கு ஈண்டு நினைப்பூட்டுகின்றோம். தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய மடங்களும் தமிழுக்கும் சைவத்துக்கும் ஏதும் புரிவதாக எமது கண்ணுக்குப் புலப்படவில்லை. புலவர் எவ ரேனும் சென்று மடாதிபதியின்மேல் பத்துப் பதிகமும் பாடுவரா னால் அவருக்குக் கம்பலப்போர்வை கொடுத்தமட்டிலேயே தமிழ்ப் புலவர்க் கிவர் மகுடதாரணம் செய்துவிட்டதாக எண்ணி விடுகின்ற னர். செல்வம் களஞ்சியம்போலப் பெற்றுள்ள மடங்கள் நிலை இவ் வாறு முடிந்தது.

இங்கு மற்றொன்று விரிக்க ஆசைப்படுகின்றோம். நமது நாடு பண்டுதொட்டே அறத்துக்குத் தலை சிறந்தது. நம் முன்னோர் அறஞ் செய்தலையே குறிக்கோளாகக் கொண்டார்கள் என்பது இப்போதுள்ள அளவிறந்த சத்திரங்கள், கோயில்கள், மடங்கள் முதலிய வற்றால் நன்கு விளங்கும். ஆனால் ஒருவரே தம் மரபிற்கேற்ப அறஞ் செய்வாரே யன்றிப் பலருங் கூடிப் பெருந் தருமத்தைச் செய்ய விரும்புவ தில்லை. இதனால் அவ்வவர் தனித்தனியாகச் செய்த அறங்கள் சிதறுண்டு ஒரு விழுப்பயனைச் செய்தற்குரிய தகுதியின்றிக் கிடக்கின்றன. மேனாட்டார் அறங்களோ செல்வர் பலரும் தரும் பெரும் பொருட்டிரளோடு அவ்வக் காலங்களில் செல்வர், வறியர் முதலிய எல்லாராலும் கொடுக்கப்படும் சிறு சிறு தொண்டுகளால் துளிதுளியாக வளர்ந்து பெரு வெள்ளமாய் ஓடுகின்றது. அவற்றைப் பாதுகாத்து நடாத்துவோரும் தக்கவண்ணம் ஏற்படுத்தப்பட்டு அறங்களும் செவ்விபெற நடைபெறுகின்றன. இத்தகைய வகை ஏற்படவேண்டுமென்று பெருமக்கள் பன்னெடு நாள் கொண்டுள்ள கருத்து முற்றுப்பெறுமாறு இதுபோழ்து சென்னைச் சட்டசபையினரால் சட்டமாக்கப்பட்ட இந்து தரும பரிபாலன மசோதா இந்துப் பிரதிநிதி அவர்களால் தள்ளப்படல் வேண்டுமென்று பழம் பெருச்சாளிகள் பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றன. இச் சட்டமே வேண்டியவளவிற்கு வரவில்லை என்பது எமது கருத்து.

இத்தகைய நிலையில் தமிழை வளர்த்தல் எவ்வாறு என்பது தான் அறிஞர் மனத்தைப் புண்படுத்துகின்றது அதற்காக எமக்குத் தோன்றிய சில வழிகளை ஈண்டுக் குறிப்பிடுவோம். முதலில் மடங்கள் சீர்திருந்தும்படி செய்து அவற்றின் பொருள் தக்க வழியில் செலவிடப் படும்படி செய்தல் வேண்டும். இரண்டாவது வேறு தருமப் பொருள்களையும் கவனித்து அதனைத் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும். தமிழ்ச் சங்கம் வேலைசெய்யும்படி முயலவேண்டும். ஏனைச் சபைகளும் வீண் முயற்சிகளை விடுத்து நன் முயற்சிகளில் தலையிடவேண்டும். பொது மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டவேண்டும். கலாசாலைகளில் தமிழ் கட்டாயப் பாடமாக அமைக்கப் படவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தல் வேண்டும். முனிசிபாலிடிகளிலும், தாலூக்கா முதலிய எல்லாச் சங்கங்களிலும் தமிழிலேயே நடபடிகள் நடத்தவேண்டுமென்றும், அங்கு எழுதப்படும் குறிப்புக்களிலும் பிறவற்றிலும் தமிழ்ப் பிழை இருத்தல் கூடாதென்றும் உழைக்கவேண்டும். இவ்வாறெல்லாம் ஒருங்குசேர்ந்து கங்கணங் கட்டிக்கொண்டு தமிழர் உழைப்பாராயின் மிக்க நலம் உண்டாகு மென்பதற்கு ஐயமில்லை.

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி.

# குயிலும் பாடகச் சிறுவனும்

கற்பக மன்ன நற்பெருந் தருக்கள்
பற்பல செறிந்த பொற்புறு மாப்பொழில்
ஒன்றினி லின்னல மொன்றிய விளைஞன்
நல்லிசை யுணர்ந்தோன் மெல்லிசைக் குரலோன்
வளங்கெழு பரிதி யிளங்கதிர் பரப்புறுங்
காலைப் போதினோர் பாலிருந் தின்றேன்
கைப்பெனும் படியிசை சொற்பொருட் கியையப்
பாடத் தொடங்கினன்; பாடுபு விடுதொறும்
சிறுகருங் குயிலொன் றருங்குர லோசை
கேட்போர் விழைதரப் பூப்பொலி யொருமரக்
குறுங்கிளை யிருந்து கூவுதல் கேட்டனன்;
காமர்வண் பொழிலுறை கருங்குயிற் பிள்ளாய்!
பண்ணின் றிறமுள பண்புட னுணர்ந்தேன்
இன்னிசை யமுதி னின்பம் விளைதரப்
பாடுதல் கேட்டுப் பணிவுட னிராது
நற்றிறத் தென்றனை நகுவாய் போலக்
கூவு கின்றனை; குரலின் செருக்கோ?
நின்குர லினிமை நின்னரு முயற்சியின்
எய்திய தன்று லியல்பினி லமைந்ததே;
அதனா 'னீசெருக் கடைத லடாதுகாண்;'
எனக்கருங் குயிலா 'னின்னிசைப் புலவ!
நின்னுட னிருந்து நிகழ்த்திசை கற்றோர்
எத்துணை யோர்? அதை யியம்புக' வென்ன,
'பதின்ம' ரென்னாப் பகர்ந்தன னிளைஞன்;

அவருள்,

'தேர்ந்தோ ரெண்ணெது? செப்புக' வென்றது;
'நான்'கென நவின்றான்; 'நன்றுநன் றவருள்
யாரிசைப் பாடலை யாவரும் விழைந்து
கேட்கின் றனரது கிளத்துக' வென்றது;
'என்னிசைப் பாடலை' யென்றனன்; 'ஐய!
இசையி னின்னுட னியல்புறத் தேர்ந்தோர்
நால்வ ராக நயந்து நின் னிசையே
எவருங் கேட்டற் கேதுரை' யென்றது;
'கருங்குயிற் பிள்ளாய்! கண்டுகொள் கிலையோ?
என்குர லினிமை யேதுகா' ணென்றனன்;
'நின்குரற் கினிய நீர்மை யமைந்தது

செயற்கையோ? வியற்கையோ? செப்புக’ வென்றதால்;
சிறுவனூர் திகைத்துச் ‘சிறுகருங் குயிலே!
இயற்கையே’ யென்று வெழிற்சிர மசைத்தனன்;
‘இயற்கை யமைதியு மியைந்துறி னன்றிச்
செயற்கை யமைதி சிறப்புறா தறிக;
எங்கெங் கெவரு மிசைத்திடும் படிகலம்
பொங்கி யெழுந்து பொலிதரு மவணெலாம்
அருட்பே ராழி யமலன தருளாம்
இயற்கை யமைதி யியைந்துள தென்று
அறிக நன்கென்’ றறைந்ததாற் குயிலே;
‘கருங்குயிற் பிள்ளாய்! கருமிசைக் குரலோய்!
என்செருக் கொழிந்தா லென்மனந் தெளியக்
கோதி னன்மதி கூறினை; குரவனில்
உன்னைப் போற்றுவ னுகப்புட’ னென்றுப்
பன்னிச் சென்றனன் பண்வலா னினிதே.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பன் கலாசாலை, சென்னை.

---

## சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர்

# வரலாறு

(81-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்குப் பின்பிறந்தார் வடிவாம்பிகையம்மை, திரிபுரசுந்தரியம்மை, மாணிக்கம் அம்மை, புட்பவல்லி அம்மை எனப் பெண்மக்கள் நால்வராவர்.

நம் சுவாமிகள் தமது தந்தையார் அலுவற்சாலைத் தலைவரால் பூவிருந்தவல்லிக்கு மாற்றப்பட்டு ஆண்டு வதியுங்கால் அவ்வூர்க்கண் கணக்காயராய் விளங்கிய பூங்காவனத்தாரிடத்து நெடுங் கணக்குத் துவங்கி இயற்றமிழ் கற்பாராயினர். இவரது நுட்ப அறிவும், மனனஞ் செய்யும் திட்பமும், கணக்காயருக்கு மிக்க வியப்பை விளைவித்தது. மடியா முயற்சியும், ஊழையுமுப்பக் கங்காணும் வினை விழைவுமுடைய இவர்பால் அவர் தமக் குண்டாய அன்பிற் களவின்று. அவ்வன்பின் பெருக்கால் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், நிகண்டு முதலிய நூற்றுறைகள் பலவற்றுள் நற்புலமை எய்துமாறு அவர் செய்வித்தனர். இங்ஙனம் இயற்கை நுண்ணறிவொடு நூற் புலமையு மெய்திய அச்சிறுகாலையே இவர்தமதுள்ளத் தூறிக் கிடக்கும் செந்தமிழ்நூற் சொல்லும் பொருளும் உருப்பெற்று

வெளிநிலவத் துவங்கி, இவர்கள் வதிந்த வீதியிறுதிக்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளிய சுந்தர விநாயகப் பெருமான்றுதியாய்,

'வாத்தியார் சொல்லிவைக்கும் வண்மையுள் பாடமெலாம்
நேர்த்தியா யென்மனதி னேர்மையுடன்—பூர்த்தியுறச்
சுந்தரவி நாயகனே தூய்மைபெறு நின்றுளென்
சிந்தையினி லேயிருக்கச் செய்.'

என்னு மிவ் வெண்பா முதற்கண்வெளிப் போந்தது. இதனை நமது சுவாமிகள் நாடோறும் பள்ளிக்குச் செல்லுங்கால், அவ்வாலயத் தெதிர் நின்று படனஞ் செய்து செல்வர். இச்செய்யுளை இவரிடங் கற்று அப்பெருமானை இவரேபோல் வழிபட்டு இவரதொரு சாலை மாணவராய் விளங்கு முதியோர் சிலர் பூவிருந்தவல்லியி லின்று முண்டு. முற்செய்தவத்தால் அவ்விளம் பருவமுதற்கொண்டே சுவாமிகட்கு இறைவன் திருவடிக்கண் நிறைந்திருந்த அன்பு கண்டு, நக்கீரதேவரா னியற்றப் பெற்றுப் பதினொன்றாந் திருமுறையி னுட்படு தெய்விக நூலாய் விளங்கும் திருமுருகாற்றுப் படையினை நாடொறும் பாரயணம் புரியப் பணித்த, தம் தந்தை சொல் மந்திரமெனப் போற்றித் தாம் இறையடி பெறுநாள்காறும் இடையீடு பாடாதாற்றி வந்தனர், இங்ஙனம் முருகப்பெருமான் திருவடிக்கண் தோய்ந்த அன்புடைய சுவாமிகள், திருவரங்கக் கலம்பகம் பாடங்கேட்டு வருகையில் 'வாடியோட வனச மன்னன்' என்ற செய்யுளில் 'முருகனோட' எனக் கேட்டவளவில் மனம் பொறாராய் அப் பரம்பொருளை இகழ்ந்து பழிசுமக்கு மிக்கலம்பகத்தை இனிப் பாடத்து ளொன்றாய் ஓதுவதொழிந்தே னெனமறுத்துக் கணக்காயர் யாது கூறியு மிசையாராய்ப் பின் திருவருணைக் கலம்பகம் பாடங் கேட்டனர். அச்சிவதூஷணம் அவர்களது அகத்தினின்றும் ஆறாச் சுடுபுண்ணைப் பல்லாண்டுகள் கடந்து தமது முப்பத்தெட்டாவது ஆண்டில் தம் புலமை மலியப்பாடிய திருவொற்றியூர்க் கலம்பகத்து,

'வேதனோட வெள்ளைமேனி யாளுமோட விண்ணவர்
வேந்தனோட விந்திராணி வெருவியோட விண்டிகழ்
சீதனோட வெயிறுதிர்ந்து தினனுமோட மகிடமூர்
தென்னனோட விவனவாவு தேவியோட விண்டெனுந்
தாதனோட மலரின்மாது தானுமோட விரதியுந்
தவறியோட வேனிலாளி தாவியோட வுரகர்க
ணாதனோட யாகசுத்த னவிரமோட வெற்றியா
ணந்தகந் தடக்கைகொண்ட நல்ல வொற்றி நம்பனே.'

என்னும் பாடல் கொடாறுதலுற்றது.

இங்ஙனம் வளர் பிறையினொளிமிகுத்து வரும் நம் சுவாமிகளை, ஒரு நாள் தாம் வீட்டிலிருந்து கல்லூரிக்கு வருங்கால் அங்கு விளை

யாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் அனைவரையும் வளாறு கொண்ட டித்துக்கொண்டே வந்த கணக்காயர் ஏதும் கவனியாது அவரோடுஞ் சேர்த்தடித்து விடுதலும்,

'எந்தவித குற்றமும்யான் இன்றுசெய் யாதிருக்க
எந்தன் றொடையதனி லேன்சூடு—வந்ததெனப்
பூரணமாய்க் கல்விகற்ற பூங்கா வணக்கவியைக்
காரணநீ கேட்டிடுக கண்டு.'

என்ற வெண்பாவை ஓலையினெழுதித் தந்தைபாலனுப்ப அவர் உடனே போந்து இப்பாடலைக் காட்டக் கண்ட கணக்காயர், மனமிக வருந்திக் குறைமிக இரப்பவும் இசையாத முதலியாரவர்கள், அன்று முதல் நம் சுவாமிகளை மேற்றிசையார் தமக்கே உரிய பாடசாலையி லுய்த்து ஆங்கிலம் பயிற்றுவித்துப் பின் தாலூக்கா பாடசாலையிற் சேர்த்துக் கல்வி கற்பிப்பாராயினர். இருமொழியும் பயின்றுவரும் ஒருவராம் நம் அண்ணல், ஆங்கொருநாள் கல்விச்சாலையினின்றும் வீட்டுக்குப் போதுங்கால் தம்முடன் போதும் மாணவக்கூட்டம், இடைப்பட்ட தோட்டமொன்றனுட் புகுந்து குறுவழி கொள்ளக் கண்டு, தாமும் உடன்செல்ல அம்மருங்கு விளைந்திருந்த புன்செய்க் குறும்பயிர் மிதியுண்டு அழிந்து படுமென நினைந்த சூரன் என்னு மத்தோட்டக்காரன் கோற் கொண்டோச்சலும் குற்றமொன்றின்றி வரம்பிடையே நடைகொண்ட நம் சுவாமிகள் அந்நோய்க்கு ஆற்றாராய்,

'தோட்டக்கா ரச்சூரன் றேன்றி வளாரடியைப்
போட்டான் முதுகில் பொறுக்கேனான்—தோட்டிதழ்சேர்
தாராருங் காளியே தாரணியி லன்னவனைப்
பாராம லேயிருக்கப் பண்.'

என்ற வெண்பா ஒன்றை அத் தோட்டத் தொருபால் வதியும் காளியை நோக்கிக் கூறி இல்லமெய்தினராக, அன்றிரவு அவன் தெய்வகதியால் ஏற்றக் கோலினின்றும் விழுந்து முடம்பட்டா னென்ப. இவர் இங்ஙனமாய நிகழ்ச்சி ஒவ்வொன்றிற்கும் அவ்வக் கால விடபேத விலையு பற்றி, இறைவனையும் அவன் வழிப்பட்ட ஏனைப் பிறதேவர்களையும் முன்னிலைப்படுத்தி யாப்புரைத்துத் தெய் வகதியால் அவை கைகூடப் பெற்ற பெரும் புலவாணர் ஒழுகலாறு மேற்கொண்ட பாவலரென்பது, இவர்தம் பின்னாளில் சென்னைக் கந்தசாமி ஆலயத்திற் கருகிலுள்ள கடைவீதிக்குச் சென்று திரும் புங்கால் தமது விபூதிச்சம்புடம் காணப் பெறாது கந்த கோட்டத் துட் சென்று,

'பூதியினுக் காலயமாம் பொற்சம்பு டந்தவறி
வீதியினி லெங்கேயோ வீழ்ந்ததுநற்—சோதிமிகுங்
கந்த கோட்டத் தமருங் காங்கேயா வக்கவலை
சிந்தையினில் வாராமற் செய்.'

எனப்பாடி இல்லஞ் சேர்ந்து இரண்டொரு நாளிலுற்ற கார்த்திகையன்று கந்த கோட்டஞ் செல்லுங்கால் அலகை யொருவன் விலை கூறக் கண்டு உண்மை யிதெனவுரைத்து, சிறிது பொருளுமீந்து பெற்றுக் கொண்டனரென்னு முண்மையானும், ஒருகால் திருவிற்கோலஞ் சென்று இறைவனை இறைஞ்சி வெளிப் போந்து அக்கோட்டத்தொரு புறம்வைத்த வெள்ளிமிலைந்த கைக்கோல் காணாதாக,

'சுந்தரர்க்குக் கோல்கொடுத்த சோதியே, கல்யாண
சுந்தரன்கோல் கொண்டதென்ன சூழ்ச்சியோ?—விந்தைமிகும்
விற்கோல மேவந்து வீறுகழலைப்பணிந்த
தற்கோபதிற் செய்தாய் சாற்று.'

எனப் பாடிச் சென்னையை யுறுங்கால் கூட்டத்துடன் போதுமொருவன் கையகத் தஃதிருப்பக் கண்டு வினயினர்க்கு அவன் பதிலிறுக்காது கொடுப்பக் கொண்டு,

'கோலையங் கேனெடுத்தாய்? கொண்டுவந்திங் கேன்கொடுத்தாய்?
வேலையிது தானோ? விளம்பிடுக—பாலைநிகர்
சொல்லார்தே விப்புகழுந் தொல்திரிபு ராந்தகனே
யெல்லாநின் றன்விளையாட்டே.'

எனப்பாடி வியந்து கொண்ட வரலாற்றானும், மற்றோர்கால், ஆண்டார் குப்பம் என்னுந் தலஞ்சென்று அத்தலத் தொளிரும் பால நதியிற் றனது கண்ணாடி இடறி வீழ்ந்து பன்முறை தேடியுங் காணாமையான் வருந்தி,

'வாக்குக்கு வல்லசெந் தமிழ்வாணர் நாணாளு மகிழ வன்னோர்
நோக்குக்கு முன்றோன்றி நற்கருணை பாலிக்கு நதிவேற் சேயே,
பாக்குக்கென் றுயர்சோலை யடர்பால நதியின்று பறித்தவென்றன்
மூக்குக்கண்ணாடியை யெங்ஙனம் பெறுவேனொருசூழ்ச்சி முன்னு
[வாயால்.'

எனக் குமாரக் கடவுள் திருமுன் பாடி மறுநாள் சென்னைக்குப் போதுங்கால் உடன்வந்த அவ்வாலய அருச்சகராம் பிரம்மஸ்ரீ விசுவநாத குருக்களிடம் கண்ணாடி விழுந்த இடத்தைக் குறிப்பித்து வருதலும் அவர்கள் சென்று ஆயுங்கால் அது, தாம் இறங்கிய வத்துறையிற்றானே தம் காலிற்பட்டதெனக் கொடுவந்துதந்த செய்தியானும் மற்றும் பிறவாற்றானும் நன்கு புலனாம்.

(தொடரும்)

தமிழ்ப் புலவர்,

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.

தமிழர் சங்கம், இபற்றமிழ்ப் பகுப்பின் காரியதரிசி.

# சிவராஜன்

## அல்லது சகோதர ஒற்றுமை

### அதிகாரம் மூன்று

மறுதினம் விடியற்காலை நான்கு மணிக்கே சிவகாமி அம்மை எழுந்து மூன்றுவகைச் சிற்றுண்டிகளும், பால்நிறைந்த காப்பியும் தயார்செய்து தன் அரும்பெறல் செல்வன் நல்வரவினை ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தனள். பின்னர் அவள் குழந்தை ஞானம்பி கையை எழுப்பி அவளைச் சிற்றுண்டி அருந்துமாறு வேண்டினள். ஞானம்பிகை தன் அன்பும் கனிவும் உள்ள அண்ணன் வந்தபின்னரே அவனுடன் அருந்துவேன் எனக் கூறினாள். சிவகாமி அம்மை அவள் அன்பின் பொலிவை வியந்து மகிழ்ச்சி பூத்தனள். அவர்கள் இருவரும் மாற்றி மாற்றி வீதியில் சென்று சிவராஜன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வீதியில் ஏதேனும் வண்டியின் சப்தம் கேட்டால், இருவரும் ஓடிப்போய்ப் பார்த்தனர். அவர்கள் காலை 6 மணியிலிருந்து 8 மணிவரையில் அவ்வாறு செய்துகொண்டிருந்தனர். ஆனால், சிவராஜன் இன்னும் வரவில்லை. அவர்களுக்குப் பெரிதும் மனக்கவலை உண்டாயிற்று. சாம்பசிவ முதலியார் அவர்கள் இருவர் சுறுசுறுப்பையும் கவனித்து, அவர்கள் இருவரையும் மனவமைதியாக இருக்குமாறு கூறினர்.

சிவகாமி அம்மை அதைக் கேட்டு அவரை நோக்கி, "தங்களுக்குச் சிவராஜன் மீது சிறிதும் கனிவில்லையா? தங்கள் மனம் கல்லோ இரும்போ நான் அறியேன். அவன் சென்று எத்தனை நாட்கள் ஆயின. தாங்கள் ஒரு வேளையேனும் அவனைக்குறித்துப் பேசவில்லையே." என வருத்தத்துடன் கூறினாள்.

சாம்பசிவ முதலியார் புன்னகைபுரிந்து, "நீ என்ன பேதை! என் புதல்வன்மீது எனக்கு அன்பிராதா? நீ சொல்லித்தானா எனக்கு அன்பு வரவேண்டும்? நீ இத்துணை இளகிய சிந்தை உடையவளாக இருத்தல் பெருந்தவறு." என மறுமொழி பகர்ந்தனர்.

அவர் தம் பதிலை முடித்தற்கு முன்னரே வெளியே ஒரு வண்டி சப்தம் கேட்டது. தாயும், பெண்ணும் வெளியே ஓடினார்கள். அவர் மாத்திரம் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தனர்.

ஞானம்பிகை, "அம்மா! அம்மா! அண்ணன் வந்துவிட்டான்" என ஒரு களிகுரலிட்டுத் தன் அன்னையை அழைத்தனள். சிவகாமி அம்மை தான் ஒரு மாது என்பதையும் கருதாது வண்டியண்டை ஓட்டமாய் ஓடினாள். இருவரும் மகிழ்பூத்த முகத்துடன் அவனை ஆர்வத்துடன் நோக்கினார்கள். அவன் வண்டியிலிருந்து கீழே இறங்கினதும், தாய் ஒரு பக்கம் தங்கை ஒரு பக்கமாக அவனைக் கட்டிக்கொண்டு மனைக்குள் அழைத்துச் சென்றனர். அவன் அவர்கள் அன்பை மிக வியந்து பேரின்புற்றான். அவன் தன் அன்னை

யையும், தங்கையையும் பல இனிய கிளவிகளால் குதூகலிக்கச் செய்தனன். அவன் கல்வியில் கருத்தில்லான் எனினும், நன்மொழி பகர்தலில் சிறந்த நிபுணன்.

அவர்கள் அனைவரும் சிற்றுண்டி அருந்தியதும், சிவராஜன் ஞானம்பிகையை அருகேயுள்ள தங்கள் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்றனன். அத்தோட்டம் அவர்கள் மனையிலிருந்து அரை மைல் தூரம் இருக்கும். அதன் மருங்கே நெல் எந்திரம் இருந்தது. அத்தோட்டத்தில் பலவகையான அருங்கனி அளிக்கும் மரங்களும், நறுமலர் சொரியும் செடிகளும், குளிர்நிழல் விரிக்கும் ஓங்கிய மரங்களும் இருந்தன. அதில் எஞ்ஞான்றும் பலவகை அழகிய சிறந்த பறவைகள் கீதம் பாடாநிற்கும். அதன்கண் ஓர் அழகிய சிறிய தங்குமிடம் பந்தல்போல் நிறுவப்பட்டிருந்தது. அக் கட்டடத்தில் சில நாற்காலிகளும் இரண்டு பலகைகளும் போடப்பட்டிருந்தன. ஆனால், அந்த இடம் பொதுமக்களுக்கென்று நியமிக்கப் படவில்லை. சாம்பசிவ முதலியார் தாமும் தம் மனைவி மக்களும் காலையிலும் மாலையிலும் இன்பமாகக் காலத்தைக் கழிக்கும் பொருட்டே அதனை நியமித்திருந்தனர்.

சிவராஜன் அதில் மூன்று புறுக்களும், இரண்டு முயல்களும் வைத்து வளர்த்துவந்தனன். அவனுக்கு அவைகளிடத்தே அளவிலா அன்புண்டு. அவன் மனத்தே இரவும், பகலும் அவற்றின் கவனமே குடிகொண்டிருக்கும். ஆதலால், அவன் சிற்றுண்டி அருந்திய வுடனே தன் அருமைத் தங்கையை ஆண்டு அழைத்துச் சென்றது விந்தையல்ல.

சிவராஜனும் ஞானம்பிகையும் பூந்தோட்டத்திற்குள் நுழைந்தனர். ஞானம்பிகை தன் அண்ணனைக் குளிர்நிழல் பரந்துள்ள ஒரு மரத்தின் கீழ் வந்து அமருமாறு வேண்டினாள். அவன் முதலில் பறவைகளைக் கண்டு பின்னர் அவ்விடம் வரலாம் எனக் கூறினான். ஆனால் அவள் தனக்குக் கால்கள் நோகின்றன என்றும், சிறிது நேரம் மரத்தின் கீழ் தங்கிப் பின்னர் அவ்விடம் செல்லலாம் என்றும் கூறினாள். அவனுக்குத் தன் தங்கைமீது பேரன்பிருந்தமையால், அவள் விருப்பத்திற்கு இணங்கினான். அவர்கள் ஒரு மரத்தின் அடியே புற்கள் தழைத்துள்ள ஓர் இடத்தே போய் அமர்ந்தனர். பின்னர் அவர்கள் இருவரும் கீழ் குறிக்குமாறு சிறிதுநேரம் களங்கமில்லா இனிய சம்பாஷணை புரியத் தொடங்கினர்.

ஞானம்பிகை.—அண்ணா! நீ தஞ்சையில் இருந்தபோது எனக்கு ஏன் தனியாக ஒரு கடிதம் எழுதவில்லை? நான் உன்னை எப்போது காண்பேனெனப் பேராவல் கொண்டிருந்தேன்.

சிவராஜன்.— ஞானம்! நீ ஏன் எனக்கு ஒரு கடிதம் தனியாக வரையவில்லை? எனக்கும் உன் கவனமே மிகுதியாக இருந்தது.

ஞானம்பிகை.—நீ முன் எழுதுவாயென எண்ணினேன். அது கிடக்கட்டும், அண்ணு! இப்போது இங்கே ஒரு சிங்கம் கர்ச்சித்துக்கொண்டு வந்தால் நீ என்ன செய்வாய்? நீ அதனுடன் தைரியமாய்ச் சண்டை செய்வாய் அல்லவா ?

சிவராஜன்.—சிங்கம் இங்கே எப்படிக் கர்ச்சித்துக்கொண்டு வரும்? சிங்கம் காட்டில் அல்லவோ இருக்கும். நீ கேட்ட கேள்வி பொருத்தமல்ல.

ஞானம்பிகை.—இல்லே, அண்ணு! நாம் காட்டில் இருப்பதாக வைத்துக்கொள். சிங்கம் மனிதர்களைப் புசிக்கின்றது. நான் நான்காம் பாடப் புத்தகத்தில் நேற்றுத்தான் படித்தேன். உனக்கு வேண்டுமானல் அந்தக் கதையைக் காட்டுகின்றேன்.

சிவராஜன்.—ஞானம்! நான் இப்போது உன்னை அந்த விஷயங்களை எல்லாம் கேட்டேனு? பயனற்ற விஷயங்களைப் பேசாதே. நாம் காட்டில் இருக்கையில் சிங்கம் வந்தால், நான் துப்பாக்கியால் அதைச் சுட்டுவிடுவேன். நான் என்ன உன்னைப்போல் பெண்ணு அஞ்சுவதற்கு?

ஞானம்பிகை. — உன்னிடம் துப்பாக்கி இல்லாதிருந்தால், என்ன செய்வாய்? மேலும் சிங்கம் நம்மைத் தின்னவருவதாக வைத்துக்கொள். நீ அப்போது என்ன செய்வாய் ?

சிவராஜன்.—நாம் எப்படியாகிலும் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவதாக வைத்துக்கொள்.

ஞானம்பிகை.—நாம் தப்பித்துக்கொள்ளுதற்கு ஒரு வழியும் இல்லையென வைத்துக்கொள். அண்ணு! அப்போது என்ன செய்வாய் ?

சிவராஜன்.—உன் மடமையை நான் என்னென்பேன். நீ கேட்கும் பயனற்ற பொருத்தமில்லாக் கேள்விகளுக்கெல்லாம் நான் விடைகள் அளித்துக்கொண்டிரேன். காலதாமதம் ஆகிறது. நான் போய் என் புறுக்களைக் காணவேண்டும்.

ஞானம்பிகை. — அண்ணு! அந்த மூன்று புறுக்களையும் என்ன விலைக்கு வாங்கினய் ?

சிவராஜன். — ஒன்பது ரூபாவுக்கு வாங்கினேன். அதைப் பற்றி என்ன?

ஞானம்பிகை.—நான் 15 ரூபா வைத்துக்கொண்டிருக்கிறேன். அந்தப் பணம் அம்மாளிடத்தில் இருக்கிறது. அண்ணு! நான் உனக்கு அதைத் தருகின்றேன்.

சிவராஜன்.—ஓ! அறிவிலி! எனக்கு ஏன் உன் பணம்? என்னிடத்தில் பணம் இல்லையா? நான் 50 ரூபா வைத்துக்கொண்டிருக்கிறேன். நீ பெண்; உனக்கு அதிக பணம் கிடைக்காது. நான் பையன்; உன்னைக் காட்டினும் நான்கு பங்கு பணம் எனக்குக்

கிடைக்கும். நீ இவ்வாறு பேசுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஓடிவா, நாம் போய்ப் புறுக்களைக் காணலாம்.

ஞானம்பிகை.—அண்ணு ! புறுக்கள் இல்லை. என்மீது கோபம் கொள்ளாதே.

சிவராஜன்.—என்ன சொன்னுய்? புறுக்கள் இல்லையா? ஞானம்! நீ என்ன விளையாடுகின்றுயா? அவை எங்கே?

ஞானம்பிகை.—அவை இறந்துவிட்டன. அண்ணு! அழாதே. நாம் என்ன செய்யலாம்? இறந்த புறுக்கள் பிழைத்து வருமா? கோபமுங் கொள்ளாதே.

சிவராஜன்.—ஓ அறிவிலி! நான் அழுதேனு? நீ எனக்குப் புத்தி புகட்டவேண்டாம். அவை எப்படி இறந்தன? இஃது என்ன விந்தை! மடச்சிறுமி! உடனே சொல்.

ஞானம்பிகை.—அவை தாமே இறந்துவிட்டன; நான் என்ன செய்வேன்? அண்ணு! என்மீது கோபங் கொள்ளாதே.

சிவராஜன்.—நீ அவற்றிற்குத் தினந்தோறும் தவறுமல் ஆகாரம் கொடுத்து வந்தாயா?

ஞானம்பிகை.—இல்லை, நான் மறந்துவிட்டேன்.

சிவராஜன்.—பேஷ்! நன்றுயிருக்கிறது. நீ எத்தனை நாட்கள் ஆகாரம் தந்தாய்?

ஞானம்பிகை.—ஒரு நாள்கூட தரவில்லை. புறுக்கள் கவனம் இப்போது தான் வந்தது. அண்ணு!

சிவராஜன்.—நம் வேலைக்காரன் கோவிந்தனிடம் சொன்னுயா?

ஞானம்பிகை.—இல்லை, நான் மறந்தேவிட்டேன்.

சிவராஜன்.—நீ மிக்க ஆணவம் படைத்தவள். உனக்குச் சரியான புருஷன் வரமாட்டான். உன்னைப்போல் பாவி ஒருத்தியும் இல்லை. எனக்கு உன்மீது சிறிதும் அன்பில்லை. நீ என்னுடன் வரவேண்டாம். வீட்டிற்குச் சென்றுவிடு. நான் கோவிந்தனைப் போய்க் காணவேண்டும். (தொடரும்)

மணி. திருஞானசம்பந்த முதலியார்,
தமிழ்ப்புலவர்.

---

## விடுகதை

வினு:

காலே ரெண்டுண்டு நடக்கறியாள், இரு கண்கள் ரெண்டும்
மேலே சிமிட்டி விழிக்கறியாள், அந்த மெல்லி நல்லாள்
பாலே குடிக்க வகையறியாள், கொஞ்சம் பாக்குத் தின்பாள்
ஆளே அறிந்து சொல்வோர்க்கு இட்ட பொன் ஆயிரமே.

— சைதாபுரமாலே.

(இதற்கு விடை தெரிந்தோர் எழுதி அனுப்பின் அடுத்த சஞ்சிகையில் அதனை அவர்கள் பெயரோடு வெளியிடப்படும்.)

சிவ. முத்து.

# பிரளயகாலமோ?

இந்துமத புராணங்களினால், உலக காலத்தை நான்கு பெரும் பகுதிகளாகப் பிரித்து அவைகளுக்கு யுகமெனப் பெயரிட்டிருப்பதும், அவைகள் முறையே, கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் எனப்படு மென்பதும் நன்கு விளங்குகிறது. மேலும் கலியுகத்தில் உலகமானது அநியாயத்தால் நிரப்பப்பட்டிருக்கு மென்றும், துஷ்டர்கள் ஓங்குவரென்றும் சிஷ்டர்கள் தாழ்வரென்றும் இந்துமத புராணங்கள் மூறையிடுகின்றன. மேலும் யுகமுடிவில் இத்தகைய அநியாயங்கள் தழைத்தோங்கி வழியுமென்றும், அப்போதே துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கிக்காக்கும் அமலன் உலகின்கண் அவதரித்து உலகுக்குப் பெரும் போதனையை யளிப்பாரென்றும் அவை தெரிவிக்கின்றன. ஆனால் இம் மாநிலத்திலுள்ள மகாஜனங்கள் இதுவரையில் 'பிரளயகாலம்' என்பது எத்தன்மையதா யிருக்கு மென்றும், அக்காலத்தில் தேசத்தின் வளப்பமும் நிலையும் எப்படி யிருக்குமென்றும் அநுமானத்தினால் அறிந்துகொண்டிருக்கலாம். அதுவும் சந்தேகமே. ஆனால் இவ்வருடத்தில் இப்போது "பிரளய காலத்தை" அநுபவத்தில் அறியக்கூடிய சமயம் நேர்ந்ததென்றே சொல்லல் வேண்டும். அதைப்பற்றி எழுதவும் எமது மனம் இடந்தரவில்லை. அப்பப்பா! என்ன மாறுதல்கள்! எத்தகைய விபரீதங்கள்! நினைக்கவும் கூடவில்லையே!

உருத்திரோத்காரி வருடம் பிறந்து சரியாக 6 மாதங்கள் கூட ஆகவில்லை. இதற்குள் இந்தியாவின் பலபாகங்களிலும் வெள்ளச் சேதமும், பெருத்த கட்டிடங்கள் இடிந்து விழுதலும், தீயினால் தகிப்பும் அதிகரித்து மானிட உயிரைக் கொள்ளைகொண்ட கோரத்தை நான் என்னவென்றுரைப்பது! இதனால் நாம் அறியக்கூடியது என்ன? இத்தகைய ஆபத்துக்கள் பூவுலகின்கண் தோன்றவேண்டிய காரண மென்னவென்று நாம் ஆராயப் புகுந்தோமானால், எம் ஐயனால் படைக்கப்பட்ட இந்த நிலவுலகிலே அநீதி, அசத்தியம், அகங்காரம் முதலியன நிரம்பி, சத்தியம், அடக்கம் முதலிய நற்குண சம்பத்துக்களுடன் போரிட்டு அவைகளை வெருட்டித் துரத்திவிட்டுத் தாம் தலையெடுத்து உலவ ஆரம்பித்து விட்டனவென்றே சொல்லல்வேண்டும். வெள்ளப்பெருக்கினால் ராஜபுதனம் முதலிய இடங்களிலுள்ள சிறு சிறு கிராமங்கள் அடையாளமின்றி அழிக்கப்பட்டன. ஆங்காங்கே சில நிமிஷகாலம் பூகம்பங்கள் தோன்றின. திருடும், புரளியும், சூதும், வாதும், நிரம்பிய செய்கைகள் மனிதர்கள் மனதை முதலில் கொள்ளைகொண்டு பிறகு அவர்களது உயிர்களையே கொள்ளைகொள்ள ஆரம்பித்து விட்டன. "இன்றைக்

இருந்தாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ இடமில்லையே” என்னும் தாயுமானரின் திருவாக்கினை மாந்தர் நினையாது “நீரிற் குமிழியாக்கை” என்றபடி இவ்வுடலும் உலகமும் மனைவி மக்களும் செல்வமும் சாசுவதமன்று என்பதையும் அறியாது நாம் என்றென்றும் அழியாத சிரஞ்சீவியாய் வாழ்வோம் என்னும் எண்ணத்தைக் கொண்டவராகிப் “பணம், பணம்” எனக் கதறியலையும் பேதமைதான் என்னே? உலக உத்தாரணத்திற்கு உதவியாய், கைத்தொழிலுக்கு அதிகாரியாய் அமர்ந்து சீரும் சிறப்பும் பெற்ற ஜப்பானின் கதி என்னவாயிற்று பாருங்கள்! இதனாலே அநியாயத்தைப் போக்கி நீதியை நிலைபெறச்செய்ய ஒரு “அண்ணல் அவசியம் தோன்றல் வேண்டும்” என்னும் ஓர் எண்ணம் எமக்கு எம்மையுமறியாது தோன்றுகிறது. ஒரு “அவதார புருஷர்” தோன்றினால்தான் உலக விவகாரங்கள் சரிவர நடக்கும். அத்தகைய “மகானுபாவர்” உதிப்பரோ, உதித்துவிட்டாரோ என்பது இப்போது எம்மால் கூறச் சாத்தியமன்று. ஆயினும், ஒரு அவதார புருஷர் வருகை அவசியம். அத்தகைய அவதாரத்தின் வருகையை யாம் ஆவலுடன் எதிர் நோக்குகிறோம்.

எ. முத்துகிருஷ்ணன்,
தமிழர் சங்கம் (மாணவர் பகுப்பு.)

---

# நம்பியாண்டார் நம்பி

“மண்ணுவதும் சோழ மண்டலமே” எனப் புலவராற் சிறப்பித்துக் கூறப்பட்டது சோழவளநாடு. அத்தகைய சோணாட்டிலே திருநாரையூர் என்னும் திருத்தலத்தின் கண்ணே ஆதி சைவ அந்தணர் ஒருவர் இருந்தார். அவ்வூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பொல்லாப் பிள்ளையாருக்குத் திருமஞ்சன முதலிய அனைத்தும் அவரே செய்து வந்தனர். அவருக்கு நம்பியாண்டார் நம்பி எனும் புதல்வர் ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அவ்வேதியர் ஓர் இன்றியமையாக் காரணங் குறித்து அயலூருக்குச் செல்ல எண்ணினர். ஆதலின், அவர் தம் மைந்தரை அழைத்துத் தாம் திரும்பி வரும் வரை பிள்ளையாருக்குச் செய்ய வேண்டிய பணிகள் அனைத்தையும் சரிவரச் செய்யுமாறு பணித்தனர். அதனைச் செவியுற்ற அச்சிறுவர் அளவிலா மகிழ்ச்சி கொண்டனர்.

மறுநாள் நம்பியாண்டார் நம்பி வைகறை துயிலெழுந்து தூய மேனியராய் ஆலய மேகினர். ஆண்டு அவர் அப்பெருமானுக்குத் தம் உள்ளங்குளிரத் திருமஞ்சனமாட்டி, நறுமலர் சூட்டி இன்புற்றனர். பின்னர், அவர் பல இனிய கனிகளையும் மற்றுமுள்ள நிவேதனப் பொருள்களையும் அப்பெருமான் திருமுன்னர்க் கொணர்ந்து வைத்துத் தம்மை மறந்து, அன்பினால் மனங்கசியக் கண்ணீருகுத்துப்

போற்றிப் புகழ்ந்து துதிசெய்து நின்றனர். இவ்வாறு சிறிது நேரங் கழிந்தது. நம்பியாண்டார் நம்பி தம் அறிவின் வயப்பட்டுக் கண் விழித்து நோக்கினர். பிள்ளையார் அதுவரை உண்ணாதிருந்தமை கண்டு பெரிதும் மனங்கவன்று திருவமுது செய்யுமாறு அப்பெருமானை நெடுநேரம் வேண்டி நின்றனர். என்ன வேண்டியும் பிள்ளையார் மௌனமே மேற்கொண்டார்.

கடைசியாக அவர் அப்பெருமானை நோக்கி "சுவாமி, தேவரீர் திருவமுது செய்வீராயின் நான் உயிர் வாழ்வேன்; இன்றேல் இது போழ்தே உயிரிழப்பேன். எம்பெருமானே, தாங்கள் இச்சிறியேன் பொருட்டுக் கருணைகூர்ந்து திருவமுது செய்யுங்கள்?" எனப் பன்முறை பணிந்திறைஞ்சினர். யாது கூறியும் பயனென்னை? பிள்ளையார் திருவமுது செய்தாரில்லை. நம்பியாண்டார் நம்பி மிருகியும் துன்புற்ற மனத்தினராய்த் தம் உயிரிழக்கத் துணிந்து அணிமையிலிருந்த ஒரு பருத்த கற்றூணின்மீது தம் தலையை மோதிக் கொண்டார். பாவம்—நம்பியாண்டார் நம்பி மிகச் சிறு பிள்ளை; தம் அளவற்ற அன்பினுல் அங்ஙனம் புரிந்தனர். இச்செயலைக் கண்டும் நம் பெருமான் சும்மாவிருப்பரோ? ஒருக்காலும் இரார். ஆதலின், அவர் நம்பியாண்டார் நம்பியின் சிரம் பாறையிற் படுமுன் அதனைத் தம் மலர்க் கரங்களால் தாங்கி "நம்பி, பொறு—பொறு இதோ உண்கின்றேன்—உண்கின்றேன்," எனக் கூறி எல்லாவற்றினையும் உண்டு அவரைக் களிப்பித்தனர். அப்போது நேரங்கடந்து விட்டதால் நம்பியாண்டார் நம்பி பிள்ளையாரை நோக்கி "எம்பெருமானே, இன்று தங்களால் மிக்க நேரமாகி விட்டது. இனி நான் பள்ளிக்குச் செல்வேனுயின் எங்கள் ஆசிரியர் தண்டிப்பார். ஆதலின் தாங்களே இன்று எனக்குப் பாடங் கற்பித்தல் வேண்டும்" என மொழிந்தனர். பிள்ளையாரும் அவ்வாறே அவருக்குப் பாடம் போதித்தார்.

இஃது இவ்வாறாக அவர்தம் தந்தையார் தாம் சென்ற காரியத்தை முடித்துத் திரும்பிவந்து தம் திருமகனாரது அருஞ் செயல் கண்டு பெருமகிழ் வெய்தினர். நாளுக்கு நாள் நம்பியாண்டார் நம்பியின் புகழ் எங்கும் பரவத் தலைப்பட்டது. இச் செய்தியைச் செவியுற்ற அபயகுலசேகர சோழ மகாராஜன் எண்ணிலாக் கனிவர்க்கங்களையும் மற்றும் நிவேதனப் பொருள்களையும் யானைகளின் மீதும், ஒட்டைகளின் மீதும் ஏற்றித் திருநாரையூருக்குக் கொணர்ந்து அவைகளைப் பொல்லாப் பிள்ளையாருக்குத் திருவமுது செய்விக்குமாறு நம்பியாண்டார் நம்பியை வேண்டிப் பின்னும் அவரை நோக்கி "ஐயனே, எனக்கு நெடுநாளாக ஒரு விருப்பமுண்டு. அது யாதெனில் தேவாரத் திருமுறைகள் இருக்குமிடந் தெரிந்து பெற்று அவைகளை உலகோர்க்கு அறிவிக்க வேண்டுமென்பதே யாகும். அவை இருக்கு மிடத்தினைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்," எனப் பணிவுடன் கூறினர். அவ்வாறே நம்பியாண்டார் நம்பி பிள்ளையாரைக் கேட்க அவர் அவை இருக்குமிடத்தினை அறிவித்ததோடு

அவற்றின் அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறித் திருத்தொண்டர்களின் திவ்விய சரிதங்களையும் அறிவித்தனர். இவ்விதமாகத் தேவாரத் திருமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிவந்தன. சோழ மன்னர் தம் கருத்து நிறைவேறியது கண்டு மகிழ்வுற்றனர். பின்னர் நம்பியாண்டார் நம்பி திருவிரட்டைமணிமாலை, திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய அரிய நூல்களை யியற்றி உலகிற்குப் பெரும் பயன் விளைத்து முத்தியடைந்தனர்.

மணி. கோபாலகிருஷ்ணன்,
தமிழர் சங்கம் (மாணவர் பகுப்பு)

---

## மாணவனுக்கு மதியுரைத்தல்

அருமை மாணவ,

நீ சிலநாட்களாகப் பள்ளிக்குச் சென்று வருகிறாய். உலகத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குக் கல்விச்சாலைக்குச் செல்வது ஆரம்பமாகையால், ஆங்கு நீ கற்கவேண்டிய விஷயங்கள் அநேகமுள.

கடவுளால் படைக்கப்பட்ட இப்பேருலகில் கல்விச்சாலை ஒரு சிறிய உலகமாகும். நீ கலாசாலையில் உத்தம மாணாக்கனாய் நடந்து கொள்வாயாயின் இவ்வுலக வாழ்க்கையை நன்றாக நடத்தி உலகத்தில் பிறந்ததாலாகிய பயனை அடைவா யென்பதில் ஐயமில்லை. 'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்னும் ஆன்றோர் மொழிக்கு இணங்க, நீ இளமையிலேயே கற்கவேண்டிய விஷயங்கள் யாவற்றையும் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

நீ உன் தாய், தம்பி, தங்கை முதலியவர்களை விட்டுவிட்டுப் பாடசாலைக்குச் செல்வதை வெறுக்கின்றாய். நீ நெடுங்காலம் இவர்களுடன் ஆடிப்பாடிக்கொண்டிருந்ததால் ஆங்குச் சென்று ஒரே இடத்தில் ஒருவருடனும் பேசாமல் மூன்று மணி நேரம் இருப்பது சிறைச்சாலையிலிருப்பதுபோல் உனக்குத் துன்பத்தை விளைக்கின்றதாயினும், சிறிது காலஞ் சென்றபின் நீயே பாடசாலைக்குச் செல்வதை விரும்புவாய். நிலையிலா இவ்வுலகின் கண்ணுள்ள மானிடர் வாழ்க்கையில் மாணவர்களாய் இருக்கும் நாட்களே அதிக இன்பத்தை விளைவிக்கக் கூடியன. ஆகையால் நீ அவற்றை எக்காலத்தும் வெறுக்கலாகாது.

நீ பாடசாலையை விரும்பாததற்கு மற்றோர் காரணமுமுண்டு. நீ முதல் முதலில் ஆங்குச் செல்லும்போது அங்கிருக்கும் மாணவர்கள் உன்னுடன் பேசாது, உன்னைக் கண்டு சிரிக்கின்றார்களென்று குறை கூறுகின்றாய். அவர்கள் உன்னை முன்பின் அறியாதவர்களாதலால் உன்னுடன் பேசுவதற்கு அஞ்சுவார்கள். நீ இரண்டொரு

மாதம் விடாது பாடசாலைக்குச் செல்வாயாகில் அவர்கள் உன்னுடன் பேசி, உன்னையும் அவர்களில் ஒருவனாகக் கருதுவார்கள். அவர்கள் உன்னுடன் பேசாதிருந்தால் அவர்களை மூடர்களென்று சொல்வது பெருங்குற்றமாகும். எப்போதும் எவரையும் நல்லவர்களென்று எண்ணி, அவர்களிடம் அன்பைச் செலுத்துவதே சிறந்தது. நீ உணராத விஷயங்களைப் பற்றி அவர்கள் உன்னிடம் சொல்வார்களானால், அவைகள் தப்பென்று நீ தெரிந்துகொள்கின்ற வரையில் உண்மையென்று நம்புதல் வேண்டும்.

அவர்கள் அந்நியர்களாதலால் உன் பெற்றோர்கள் உன்னைக் கவனிப்பதுபோல் ஒருபொழுதும் கவனியார். அவர்கள் அவ்வாறு கவனியாதிருத்தலைக் குற்றமென்றெண்ணி, அவர்களை நேசியாதிருத்தலினும் மூடத்தன்மை வேறொன்றுமில்லை. நீ அவர்களிடம் இங்கிருக்கும் பிள்ளைகளிடம் நடந்ததுபோல் நடக்கலாகாது. அவர்கள் உன் விருப்பத்தின்படி எதையும் செய்யமாட்டார்கள். நீயொன்று சொன்னால் அவர்கள் அதற்கு நேர் விரோதமாகச் சொல்வார்கள். அவற்றையெல்லாம் நீ பொறுத்துக்கொள்ளவேண்டும். உன் பெற்றோர்கள் உன்மீது செலுத்தும் அன்புபோல் உலகத்தார் செலுத்துவார்களென்று எண்ணாதே. உன் வீட்டில் நீ எதையும் செய்யக்கூடும். ஆனால், பாடசாலையில் அவ்வாறு செய்ய இயலாது. அங்கு உனக்குச் செல்வத்தில் ஒப்பாரும் மிக்காரும் இருக்கின்றார்களாதலால், உன் செல்வச் செருக்கைக் காட்டலாகாது. பாடசாலையில் எவ்வாறு உன்னை உன்னிடமிருக்கும் மாணவர்கள் நடத்துகின்றார்களோ அவ்வாறுதான் உலகத்தார் நடத்துவார்கள். இதைக் கருதியே நான் உனக்கு இந்த விஷயத்தைப் பாடசாலைக்குப் போகும் முன்னரே அது பேருலகத்தில் அடங்கிய ஒரு சிறிய உலகமென்று மொழிந்தேன். நீ பாடசாலையிலே நான் என்னும் கருவச்சொல்லை அறவே ஒழித்தல் வேண்டும்.

கலாசாலையில் மாணவர்களில் சிலர் உன்னைப்போல் உடை உடுத்திக்கொண்டு வாராவிட்டால் அவர்களைக் கண்டு ஏளனம் செய்யாதே. ஒருவரையும் அவர்களின் வறுமையின் காரணமாய் அசட்டை செய்து வெறுத்தல் கூடாது. அவ்வாறு செய்வதால் அவர்களுக்குத் துன்பத்தை விளைவித்து நீயும் பாவத்தைத் தேடிக்கொள்கின்றாய். பாடசாலை மாணவர்களுக்குப் பேர் வைத்து நீ அழைக்க விரும்பலாம். அவ்வெண்ணத்தை நீ அறவே ஒழித்துவிடு. ஏனெனில் அது எக்காலத்தும் துன்பத்தை விளைவிக்கும். உன் அறியாமையால் அவ்வாறு கூப்பிடுவதால் ஓர் இன்பத்தை அடைகின்றாயாயினும், அவன் துன்பப்படுகின்றான். அது காரணமாக அவன் உன்னை வெறுத்து உனக்கு எவ்விதத்திலாவது தீங்கு செய்யக் காத்திருப்பான். உலகத்தில் யாவர்க்கும் நல்லவனென்று நடந்துகொள்ளல் வேண்டும். இவ்விதக் கொடிய பழக்கங்களை

முற்றும் விட்டு அவர்களிடம் காணும் சிறந்த குணங்களை மேற்கொண்டு நடந்துகொள்வாயென்று நம்புகின்றேன்.

உனக்கு நான் கல்வி சம்பந்தமாகச் சொல்லவேண்டியது அதிகமில்லை. ஆங்கில மொழியை நீ கற்க வேண்டியது இன்றியமையாததாகும். ஆங்கிலது துரைத்தனமாயிருத்தலால்தான் நாம் ஆங்கில மொழியைப் படிக்கவேண்டியதாயிற்று என்று சிலர் எண்ணுகின்றனர். அது முற்றும் பிழையே. பிறபாஷையில் உள்ள அருமையான நூல்கள் யாவையும் அவர்கள் தங்கள் ஆங்கில பாஷையில் வெளியிட்டிருக்கின்றனர். அவைகளை நீ படிப்பதால் உண்டாகும் பெரும் பயனுக்குக் கணக்கில்லை. சிலர் தேசபாஷையாகிய நம் இனிய தமிழ் மொழியை வெறுத்து அதைக் கற்காது விடுகின்றனர். நீ அவர்களைப்போலில்லாது உன் நாட்டு மொழியைக் கற்பதுதான் நீ உன் நாட்டுக்குச் செய்யும் நன்மைகளுள் முதன்மைபெற்றதாகும். மற்றும் எல்லாப் பாடங்களையும் கவனித்துப் படித்துக்கொள். உன் உபாத்தியாயர் சொற்படி நீ நடந்துகொள்ளல் வேண்டும். அவர் பாடங்கள் கற்பிக்குங் காலத்து உன் மனத்தை வேறெங்கும் செலுத்தாது அவைகளை முற்றும் கவனமாய்க் கேட்டுக்கொள். அவர் சொல்வதில் உனக்குத் தெரியாதவை யிருப்பின் அவரை மிக வணக்கமாய்க் கேட்டுத் தெரிந்துகொள்.

நீ எக்காலத்தும் உன் புத்தகங்களைப் படிப்பதிலேயே காலத்தைக் கழிக்காதே; காலை மாலைகளில் உன்னைப் படைத்த தந்தையாகிய கடவுளைத் தொழுதல் வேண்டும். தேகத்தைத் திடப்படுத்தும்பொருட்டு ஒவ்வொரு நாளும் மாலைப் போதில் நன்றாய் ஓடி ஆடி விளையாடுதல் வேண்டும். இதைக் காட்டிலும் நான் உனக்குச் சொல்ல வேண்டுவது வேறொன்று மில்லை யென்று எனக்குத் தோன்றுகின்றது. இதுபோல் நீ நடந்து கொள்வதே எனக்கு இன்பத்தையும் மனத்திருப்தியையும் உண்டாக்கும் என்பதை உனக்குத் தெரிவித்து நான் இந்த விஷயத்தை நிறுத்துகின்றேன்.

மணி. கோட்டீச்சுவரன் B. A.
தமிழர் சங்கம், மாணவர் பகுப்பின் காரியதரிசி.

---

# திருத்தம்

| இதழ் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 6 | பத்திரிகையின் முகப்பு | 5 | ஆவணி | புரட்டாசி |
| ,, | 73 | 20 | நூல் | நூல்போன |
| ,, | ,, | 23 | அல்லதூஉம் | அற்றன்று |
| ,, | ,, | 25, 26 | பெறுதுமாக்கின் | பெறுதுமாலெனின் |
| 7 | 111 | 5 | விளக்குவது | விளக்குவதுபோல் அறிவிக்கும் |

# மனமோகனன் அல்லது மாய மாளிகை

## 2. ஆ! என்ன ஆச்சரியம்!

ஆம்; உண்மையில் அது ஒரு சிறுமியின் குரலே. அக்குரலைக் கேட்டதும் எனக்கு மிகவும் ஆச்சரியமே உண்டாயிற்று.

"ஐயா, திருப்பள்ளி வீதி எங்கே இருக்கிறது? என்று ஆர்வத்துடன் கேட்டாள் அச்சிறுமி."

அவளுக்கு வயது ஒன்பது அல்லது பத்துக்குமேல் இராது. அவள் நீலப்பட்டாடை தரித்திருந்தாள். அவள் முகம் பார்த்து பொலிவுற்று விளங்கியது. அவள் இரண்டொரு நகைகளே அணிந்திருந்தாள். எனினும், அவை மிகுதியும் விலையேறப் பெற்றவை. நான் அவளைக் கண்டதும் மிக்க ஆச்சரியத்துடன் கூர்ந்து நோக்கினேன்.

"ஆ! குழந்தாய், நீ யார்? உன் பெயரென்ன?"

"என் பெயர் கோகிலாம்பாள்."

"உன் தந்தையின் பெயர் என்ன? அவருக்கு என்ன வேலை?"

"ஐயா, எனக்குத் தந்தை யில்லை. அவர் இறந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. என் பெரிய தந்தை என்னை வளர்த்து வருகின்றார். அவர் பெயர் டேல்லிபாட்சா. ஆனால், அவரை எல்லோரும் பாட்சா என்றே அழைக்கின்றார்கள். அவர் உத்தியோகத்தைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது.

"நல்லது — குழந்தாய், இந்த நள்ளிரவில் நீ ஏன் இங்கு வந்தாய்?

"ஆ—அதுவா—அதுவா?"

"குழந்தாய், ஏன் மயங்குகின்றாய்? பயப்படவேண்டாம்; உண்மையைச் சொல்."

"நான் இன்று சாயங்காலம்—எங்கள் அத்தை வீட்டிற்குப் போயிருந்தேன—"

"அது எங்கே இருக்கிறது?"

"இராயபுரம்."

"நல்லது; பிறகு—"

"அங்கே நான் விளையாடிக் கொண்டிருந்தேன்—அப்போது ஒரு கண்ணாடிச் சாமானை யுடைத்துவிட்டேன். அதற்காக என் அத்தை என்மீது கோபித்துக் கொண்டார்கள்—"

"ஓ! அதன் பொருட்டு நீ அவர்களிடம் சொல்லாமல் வந்து விட்டாயா?"

"ஆம்—அதுவுமல்லாமல் அவர்கள் என்னைத் திட்டினார்கள். எங்கள் வீட்டுக்குப்போக எனக்கு வழிதெரியும் என நான் எண்ணினேன். ஆனால், நான் இவ்வளவு நேரம் அலைந்தும் அது எனக்கு

அகப்படவில்லை நடந்து—நடந்து என் கால்களும் நோகின்றன—ஐயா, இப்போது என்ன மணியிருக்கும்?"

நான் உடனே என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். அப்போது மணி சரியாகப் பதினென்று.

"ஐயோ—எங்கள் பாட்சா என்னைத் தேடுவாரே! எங்கள் வீட்டு வேலைக்காரி இலக்ஷ்மி எட்டு மணிக்கெல்லாம் வந்து என்னை அழைத்துப் போவதாகச் சொன்னளே! ஏது—அவள் இன்னேரம் என்னைக் காணமல் திரும்பிப் போயிருப்பாள்! ஐயோ—நான் என்ன செய்வேன்!—ஐயா, தங்களுக்குத் தெரியுமா திருப்பள்ளி வீதி?

"குழந்தாய், வருந்தவேண்டாம். நான் உன்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றேன். ஆனல், எனக்குத் திருப்பள்ளி வீதி எங்கே இருக்கிறதோ தெரியாது. ஆயினும் அதை நான் எப்படியேனும் கண்டுபிடித்து விடுவேன். குழந்தாய், அந்தத் தெரு இச் சென்னையில்தான் இருக்கின்றதா?

"ஆம். இங்கேதான் இருக்கிறது—ஐயா, உங்களுக்குத் தொண்டை மண்டலம் பாடசாலை தெரியுமா?"

"ஓ! அது எனக்குத் தெரியும். தொண்டை மண்டலம் பாடசாலை தங்கசாலை வீதியில் இருக்கிறது."

"ஆம்—ஐயா, அங்கே விட்டுவிட்டால் நான் எங்கள் வீட்டிற்குப் போய்விடுவேன்."

"நல்லது; குழந்தாய், அதோ ஒரு ரிக்ஷா வண்டி வருகிறது. அவ்வண்டிக்காரனுக்கு எல்லாத் தெருக்களும் தெரியும்."

இவ்விதம் பேசிக்கொண்டே நாங்கள் இருவரும் அவ்வண்டியை யடைந்தோம். அவ்வண்டிக்காரன் திருப்பள்ளித் தெருவில் விடுவதாகச் சொல்லி எங்களை அதில் ஏற்றிக்கொண்டு போனன். அச் சிறுமியின் முகத்தில் அப்போதுதான் புன்னகை அரும்பியது. நான் பொழுதுபோக்கின் நிமித்தம் அச் சிறுமியைச் சில கேள்விகளை கேட்க எண்ணினேன்.

"குழந்தாய், கோகிலா, உனக்கு உங்கள் வீட்டின் கதவிலக்கம் தெரியுமா?"

"ஓ—நன்ருகத் தெரியும்—48"

"நல்லது, நீ எந்தப் பாடசாலையில் படிக்கின்ருய்?"

"நான் பாடசாலையில் படிப்பதில்லை. எங்கள் வாத்தியாரம்மாள்—வேதவல்லித்தாயார் எனக்கு இங்கிலீஷ், தமிழ், கணக்கு—எல்லாம் வீட்டிலேயே சொல்லிக் கொடுக்கிருர்கள்."

நாங்கள் இவ்விதம் பேசிக்கொண்டு செல்லும்போது தங்கசாலை வீதியை வந்து சேர்ந்தோம். அப்போது இரவு பதினென்றுக்கு மேல் இருக்கும். வண்டிகளின் சப்தம் அதிகமாயிருந்ததால், நாங்கள் இருவரும் பேசாமலேயே சென்ருேம்.

சிறிது தூரம் சென்றதும் அச்சிறுமி தன் விரலை வாயருகில் வைத்து ஏதோ யோசித்தாள். பின்னர், "ஆ!—நான் மறந்தேபோ

னேன்! இன்றிரவு எட்டு மணிக்கு மைசூரிலிருந்து கோமளாம்பாள் வருவதாக நேற்றுக் காலை கடிதம் வந்ததே!—ஆம்—ஆம். இந் நேரம் அவள் வந்திருப்பாள்.—ஐயா, நாம் சீக்கிரம் போகவேண்டும். வண்டிக்காரனிடம் சொல்லுங்கள்" என்று அவள் அவசரத்துடன் மொழிந்தாள்.

"கோகிலா, அவசரப்படவேண்டாம். நீ அவ்விதமே சீக்கிரம் போகலாம். நாம் அருகிலேயே வந்துவிட்டோம்."

"ஓ! நீங்கள் வரமாட்டீர்களோ? எங்கள் வீட்டிற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும். எங்கள் பாட்சா உங்களைக் கண்டால் மிகவும் சந்தோஷப்படுவார். கோமளாம்பாள் கூட தங்கள் நல்ல குணத்தைக் கண்டு மகிழ்வாள்—ஐயா, அவள் மிக்க நல்லவள். கர்வம் என்பதே கிடையாது. என்மீது அவளுக்கு மிக்க ஆசை—"

"கோமளாம்பாள் யார்? உன் தங்கையா?"

"ஓ! அவள் என் தங்கையல்ல—தமக்கை — எங்கள் பாட்சாவின் புதல்வி"

அப்போது வண்டி திருப்பள்ளி வீதியண்டை வந்து நின்று விட்டது. ஆதலால், நாங்கள் வண்டியை விட்டு இறங்கினோம். வண்டிக்காரன் தனக்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுச் சென்றான்.

அச்சிறுமி தன் வீட்டைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அங்குமிங்கும் ஓடினாள். பின்னர் அவள் ஒன்றும் தோன்றப் பெறாமல் சிறிதுநேரம் திகைத்து நின்றாள்.

"குழந்தாய், ஏன் விழிக்கின்றாய்? உங்கள்வீடு இன்னதென்பது உனக்குத் தெரியவில்லையா? இதோ நான் பார்த்துச் சொல்லுகின்றேன்" என்று சொல்லிக் கொண்டே நான் அத்தெருவில் 48-வது எண்ணுள்ள வீட்டைத் தேடினேன். அப்போது அச்சிறுமி அத் தெருவின் கோடிக்கு ஓடிச்சென்று அங்கு எழுதப்பட்டிருக்கும் பெயரைப் படித்து விட்டு வேகமாய் என்னிடம் ஓடி வந்தாள்.

"ஐயா, இது திருப்பள்ளி வீதி யல்ல—திருப்பள்ளித் தெரு. இதையறியாமல் அந்த மடையன் நம்மை இங்கே இறக்கிவிட்டான்."

"அப்படியா!—ஆனல் இதோ அவனை அழைக்கின்றேன்". என்று சொல்லி நான் வண்டிக்காரனைக் கூப்பிட ஆரம்பித்தேன். அதற்குள் அச்சிறுமி "வேண்டாம்—வேண்டாம். அவன் போகட்டும். இனி எனக்கு வழி தெரியும். எங்கள் வீதி இதற்கு அருகாமையில்தான் இருக்கின்றது," என்று சொல்லி என்னை அழைத்துக்கொண்டு வேகமாகச் சென்றாள். அவள் அத்தெருவின் வழியே சிறிதுதூரம் சென்று பின்னர்ப் பல குறுக்குச் சந்துகளின் வழியே என்னை அழைத்துச் சென்றாள். நான் இவ்விதம் ஏறக்குறைய அரைமயில் தூரம் சென்றிருப்பேன் என்று எண்ணுகின்றேன். நான் போகும்பொழுது வழியில் சில மைதானங்களையும்,

தோட்டங்களையும் கடந்து சென்றேன். முடிவில் அவள் ஒரு குறுகி நீண்ட வீதிக்கு என்னை அழைத்துச்சென்றாள். அங்கே சென்றதும் முழுவதும் நீலவர்ணம் பூசப்பட்டிருந்த ஒரு மெத்தைவீட்டில் நுழைந்து மிக்க பலமாக இரண்டொருதரம் தட்டினாள். உடனே கதவு திறக்கப்பட்டது அவ்வீட்டிலிருந்து முற்றிலும் நிரைத்த தாடியையுடைய ஒரு கிழவர் கையில் விளக்கோடு வெளியே வந்தார். நான் அவரைக் கண்டதும் மிக்க ஆச்சரியமுற்றவனாய் ஒன்றும் தோன்றப்பெறாமல் திகைத்து நின்றேன். (தொடரும்)

மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்,
பத்திராசிரியர்.

---

## குடியர்கள் கொண்டாட்டம்

(சேவரத்தில் ஒரு பனந்தோப்பு—மாலை நான்கு மணி—முனிசாமி என்னும் குடியன் ஒரு கட்பானையைக் கையில் ஏந்திவருகிறான்—மூன்று குடியர்கள் அவனைப் பின்தொடர்கிறார்கள்.)

முனிசாமி—அடே ராமா, எங்கேடா? காலம் கெட்டுப்போச்சு—நாலுபணம் கொடுத்தாலும் காலு மொந்தை கள்ளு அகப்படலே.

இராமசாமி—அடே முனியா, நீ பெரிய முனீஸ்வரண்டா!—நீ பீப்பா கள்ளு ஒண்ணு குடித்து ஏப்பமிடுவாய்—அதற்கு இப்போ எங்கே போகலாம்?

சுப்பராயன்—அடே போடா—நீ ரொம்ப யோக்கிய சிகாமணிடா—உனக்கு அகப்பட்டால் குடிக்கமாட்டாயா?—பாவம்! இளைப்பு ஒட்டவில்லை. நீ என்ன செய்வாய்?—பொன்னுபானை கொடுத்தாலும் கள்ளுபானை அகப்படலே—அதற்கு என்ன செய்யலாம்?

முனிசாமி—அடே குடிகாரப் பசங்களே, சும்மா யிருங்கடா—நான் ஒரு 'டம்' அடிக்கப்போறேன்.

(குடித்துக்கொண்டே பாடுகிறான்)

பனைமரத்தில் பதுங்கியுள்ள
இனித்தநல்ல பைங்கிளியே
உனைமறந்தால் உயிர்வாழேன்
கண்ணே பெண்ணே கருங்குயிலே
—நன்னானே நான நன்னே நன்னானே.

(ஆடுகிறான்; மறுபடியும் பாடுகிறான்)

எல்லோரும் இனிக்குங் கள்ளு
எங்களுக்கே ஏற்ற கள்ளு
நல்லோரும் வேண்டுங் கள்ளு
நான்குடிக்கும் இன்பக் கள்ளு
—நன்னானே நானநன்னே நன்னானே.

(ஆடுகிறான்)

சுப்பன்— சுப்பராயன் வேண்டில் கள்ளு
சுகமுடனே நீகுடித்தாய்
அப்பா முனிசாமி
எனக்குமொரு மொந்தைகொடு
—நன்னானே நானநன்னே நன்னானே.
(பானையைப் பிடுங்கிக் குடித்துவிட்டு ஆடுகின்றான்)

இராமன்— ஆட்டத்தில் குறையமாட்டேன்
அழகாகப் பாடிடுவேன்
நீட்டுங்கள் மொந்தையினை
நேயர்களே நான்குடிக்க
—நன்னானே நானநன்னே நன்னானே.
(மூவரும் குடித்துவிட்டுப் பாடிப்பாடி ஆடுகின்றார்கள்)

மூவரும்— இன்பர்த ருமணியே!
ஏழைகள் கண்மணியே!
அன்பாய்க்கு டித்துவிட்டோம்;
ஆட்டம்பல ஆடிடுவோம். 1

காத்தவ ராயசாமி!
கள்ளினுக் கண்ணுசாமி!
பார்த்து நீ எங்களையே
பாதுகாக்க வேணுமப்பா 2

மதுரைவாழ் சொக்கலிங்கம்!
மீனாட்சி எங்களம்மை!
எதுசெய்யினும் ஏழைகளை
எப்படியும் காக்கவேணும். 3

(ஆடி ஆடிக் களைத்துவிட்டார்கள்)

சுப்பன்—அடே—அடே! யாராகிலும் கிட்டே வந்தால்—எட்டி உதைப்பேன்—குனிந்து பார்த்தால் நிமிந்து உதைப்பேன்—அடே—என்னை என்னு ஷோக்கா தள்ளுதடா—அடே—அடே—அடே— (கீழே விழுந்து பிணம்போல் கிடக்கின்றான்)

இராமன்—அடே! சுப்புராயன் மப்புராயன் ஆனான்டா—ஆனாலும் பரவாயில்லெ—அவன் என்னை ஷோக்கா மதுபானம் மண்டையிலே ஏறித் தொண்டையிலே விக்கிக்கொண்டு தூங்குறான்டா—அவன் ரொம்ப குடிச்சான் நண்ணு போதை உண்டாச்சி. என் கண்டிராவி எனக்குத்தான்டா எங்கே போனாலும் எச்சைக் கள்ளே கிடைக்குது. அதுவும் கைக்கெட்டினால் வாய்க்கெட்டலே—

முனிசாமி—அடே ராமசாமி—நீ சாப்பாட்டுச் சாமிடா—போடா—போடா—பைத்தியக்காரா — என்னைப்பார்ரா — எனக்கு எப்படித் தள்ளுது—

இராமசாமி—அடே முனிசாமி—நீ பெரிய சனிசாமிடா—என்னைச் சாப்பாட்டுச்சாமி என்றதைக் காட்டிலும் குடிகாரச்சாமி என்று சொல்லேண்டா. அதாகிலும் கேட்டா காதுக்கு இன்பமாயிருக்கும்.

முனிசாமி—அடே—அடே! போதும் உன் கடையைக்கட்டுடா—நான் இப்போது ஒரு பாட்டுப் பாடுகிறேன். (பாடுகிறான்)

எட்டு திக்கும் பேரெடுத்த
பெரிய குடியன் நானடா.
இட்டமாகச் சாராயத்தைத்
திருடியே குடிப்பண்டா.
கள்ளுமொந்தை கண்டுவிட்டால்
காதலாய் எடுத்து நான்
துள்ளியே—குடித்திடும்
தீர மடையன் நானடா.

இராமசாமி—அடே! பேஷ்—பேஷ்—நீ மடையன்தாண்டா—அதிலொன்றும் ஆட்சேபனையே இல்லை—

முனிசாமி—அடே என்னுடா—என்னுடா? நான் மன்னன்—மன்னன். சாக்கிரதை—பஜாவ்; கவுர்தே—(இன்னும் குடிக்கிறான்)

இராமன்—அடே! நீ என்னுடாசெய்வே? உன் குடிவெறி—உனக்குத் தலைகால் தெரியலே—அடே பயலே இப்படிக் கொண்டாடா அந்தக் கள்ளுமொந்தையை. (வாங்கிக் குடிக்கின்றான்)

முனியன்—அடே! பலே மஜாவா இருக்குதடா—இன்னும் 4 டிராம் பட்டை—1½ படி கள்ளுதாண்டா வேண்டும்—

(தள்ளாடித் தள்ளாடி விழுகின்றான்)

இராமன்—அடே! நான் சொல்றேன் கேளு—நமக்குப் பெண்டாட்டி பிள்ளை என்னுத்துக்குடா? — வீடு வாசல் என்னுத்துக்குடா?—தாய் தந்தை என்னுத்துக்குடா?—அண்ணன் தம்பி வேண்டாண்டா—மானம் வெட்கம் வேண்டாண்டா—தெய்வம் தேவதை வேண்டாண்டா—என் தெய்வத்தை வர்ணிக்கின்றேன் பாருடா—

(பாடுகிறான்)

வெள்ளியதாய் ஒளிகாட்டும் கள்ளமுதே!
வளமிகுந்த உன்குழவி மொந்தையே!
தள்ளரிய தவமுடைய வெறிகொடுக்கும்
தனிப்பட்டை சாராயப் பாவையே!
உள்ளமெலாம் இனித்திடவே வந்தகுல தேவதையே!
ஒயின்விஸ்கி தெய்வங்களே!
கள்ளமிலாக் குடியர்களைக் கருத்துடனே
காக்கவந்த கயிலைமலை தேவதேவே!

முனியன்—போடா பைத்தியக்காரா!—என்பாட்டைக் கேளடா— (பாடுகிறான்)

பொன்மனைவி மாண்டிட் டாலும்
புகழ்மக்கள் வீழ்ந்திட் டாலும்
என்செல்வம் ஒழிந்திட் டாலும்
யான்பசியால் அலைந்திட் டாலும்
அன்பமெலாம் தொடர்ந்திட் டாலும்
தொலைந்துயிரே போய்விட் டாலும்
ஒயின், விஸ்கி, கள், சாராயம்
ஒருகணம்நான் மறந்திரேனே.

(மறுபடியும் குடிக்கின்றான். மயங்கி விழுந்திருந்த சுப்பன் பாட்டைக் கேட்டு எழுந்திருக்கின்றான்)

சுப்பன்—பேஷ் — பேஷ் — பேஷ் — நன்று சொன்னேடா. பெண்டாட்டி பிள்ளை—நான்சென்ஸ் (Nonsense) தாய், தந்தை, அண்ணன், தம்பி எல்லோரும் — நான்சென்ஸ் — அடே! நான் பாடுகிறேன்—எல்லோரும் அப்படியே பாடுங்கள்— (பாடுகிறான்)

(மற்றவர்கள் பின்னால் பாடுகின்றனர்)

1. அப்பாமாரே, ஐயாமாரே, அண்ணமாரே—நான்
செப்புவதை இன்பமுடன் கேட்பீர்நீரே
2. காஞ்சிபுரத்துக் கள்ளு மிக்க இனிக்கும்—அதைக்
கண்டால் கொடுக்கமாட்டோம் ஒருவருக்கும்
3. செங்கல்பட்டு பட்டை மிக ஷோக்குக்கொடுக்கும்—எங்கள்
பெண்டாட்டித் தாலிவைத்து வாங்கிக்குடிப்போம்
4. சிவரத்துத் தென்னங்கள்ளு தெவிட்டாதே—பையன்
அண்ணாக்கயிறை விற்றும் குடிப்போமே
5. சென்னைநகர் உஸ்கி மிக ரத்தம் கொடுக்கும்—எங்கள்
நிலங்களை விற்று-விற்று வாங்கிக் குடிப்போம்
6. வாலாஜாபாத்துக் கள்ளு வரங்கொடுக்கும்—நாங்கள்
வாங்கி வாங்கித் தினந்தினம் குடிப்போமே—

(மூவரும் ஒன்றுசேர்ந்து பாடிப்பாடி ஆடுகிறார்கள்)

மூவரும்—இன்பம் நிறை கள்ளே!
எங்கள் பனங்கள்ளே!!
துன்பம் நீங்கவே
தினம் தினம் வா வா! (ஆடுகிறார்கள்)

(சுந்தரேசையர் என்னும் போலீஸ் இன்ஸ்பெக்டரும், அவர் நண்பர் மாணிக்கம் பிள்ளை என்பவரும் இவைகளை மறைவாக இருந்து கவனித்துப் பின்னர் அருகே வருகின்றனர்.)

சுந்தரேசையர்—ஏ! மூடர்களே! மடையர்களே! குடிகாரர்களே!!—உங்களுக்கு அறிவில்லையே? மானம் வெட்கம் துறந்து, மனைவிமக்களை மறந்து, வீடுவாசல்களை இழந்து, தேகவனப்பையும் சுகத்தையும் ஒழித்து, மகாபாதகர்களாய்த் திரியும் பெரும் பாவிகளே! கள்ளினால் வரும் தீங்கை நீங்கள் கனவிலும் கேட்டதில்லையா?

‘உருவழிக்கும்—மானம் உயர்வழிக்கும்—உண்மைத் திருவழிக்கும்—செல்வம் சிதைக்கும்’—என்பதை இப்போதேனும் உணருங்கள்.

மாணிக்கம்—இவ்வளவுதானா? ‘மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை,’ பசியுடைமை, மனைவியர்பால் ஆசை எல்லாம் அழிக்கும் மது.

(எல்லோரும் தலைகுனிந்து நிற்கின்றார்கள்)

சுந்தரேசையர்—அடே! மூடசிகாமணிகளே! நீங்கள் பிராமண சாதியிலும், முதலியார் குலத்திலும், செட்டியார் வம்சத்திலும் பிறந்தும் குடியர்களாய்க் கெட்டுத் திரிகிறீர்கள்! இந்தப் பாழான குடியை ஒழிப்பதற்காகவே தருமகுணமுள்ள துரைத்தனத்தார் கள்ளுக்கடைகளையும், சாராயக்கடைகளையும் வருஷாவருஷம் குறைக்கின்றார்கள்—அவைகட்கு மேன்மேலும் வரிகளை உயர்த்துகிறார்கள்—மற்றும் பல ஏற்பாடுகளும் செய்து வருகின்றார்கள்—என்ன செய்தும் உங்கள் தொல்லை எங்களுக்கு ஒழியவில்லை.—அடே! நான் யார் தெரியுமா? நான்தான் இந்த ஊர் போலீஸ் இனிஸ்பெக்டர்—

(ஊதுகுழலை வாயில் வைத்து ஊதுகிறார். இரண்டு போலீஸ் சேகவர்கள் ஓடி வருகிறார்கள்.)

குடியர் மூவரும்—சாமி—சாமி—நாங்கள் குழைந்தை குட்டிக்காரர்கள்—எங்களை மன்னிக்கவேண்டும் சாமி—உங்கள் காலில் விழுகிறோம்—மன்னிக்கவேண்டும்—இனி நாங்கள் குடிக்கவே மாட்டோம் சாமி— (காலில் விழுந்து வேண்டுகிறார்கள்)

சுந்தரேசையர்—அடே, நீங்கள் இன்னமும் தொந்தரவு செய்ய வேண்டாம்—ஓய்! 219—316 இவர்களை இழுத்துக்கொண்டுபோ—

(சேவகர்கள் இழுத்துச் செல்கிறார்கள்)

சேவகர்கள்—அடே குடியர்களே—நிமிர்ந்தால்—உதை. குனிந்தால்—குத்து. அடே மடையர்களே! அழுதால் அறை—விழுந்தால் உதை— (உதைத்துக்கொண்டே இழுத்துச் செல்கிறார்கள்)

ஞானமுத்து.

மதிப்புரை:

சத்தியாக்கிரகம்:—மகாத்துமாகாந்தி அவர்கள் அருளிச்செய்த இது, திரு-போ. திருகூட சுந்தரம்பிள்ளை M. A., B. L., அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. உலகவாழ்வை இன்பமாய்க் கழிக்க விரும்பும் எல்லோர்க்கும் இதில் உள்ள விஷயங்கள் பெரிதும் பயன்தருவன. இஃது எளிய இனிய நடையில் யாவரும் உணருமாறு எழுதப்பட்டுளது. இப்புத்தகம் மகாத்துமா காந்தி அவர்களின் புகைப்படத்தோடு மிக்க அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா ஆறு.

வேண்டுவோர் M. V. வீரவாகு பிள்ளை, முத்தியால்பேட்டை ஐஸ்கூல், சென்னை என்னும் விலாசத்திற்கு எழுதவும்.

சிவ. முத்து.

# N. T. JEEVA & CO.,

## N. T. ஜீவா அண்டு கோ.,

**1/382, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை சென்னை.**

---

### நூதன மிலனீஸ் பட்டை கெடியாரங்கள்.

மிலனீஸ் பட்டையுள்ள கெடியாரங்களில் வெள்ளி கெடியாரத்திற்கு வெள்ளி மிலனிஸ் பட்டையும் ஜெர்மன் சில்வர் நிக்கில் கெடியாரத்திற்கு ஜெர்மன் ஸில்வர் மிலனிஸ் பட்டையும், பொன்கில்ட் கெடியாரத்திற்கு பொன்கில்ட் பட்டையும் சேர்த்து அனுப்புகிரோம். இது கையில் தரிக்க அழகாயும் கம்பீரமாயும் இருக்கும் மிலனிஸ் பட்டை வேண்டாவிடில் தோல்பட்டையும் உபயோகிக்கலாம்.

நிக்கில் ரிஸ்லெட் கெடியாரமும் ஜெர்மன் சில்வர் மிலனீஸ் பட்டையும் சேர்ந்தது விலை ரூபா 8 0 0

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் மிலனீஸ் பட்டையும் சேர்ந்தது ரூ 9 0 0

வெள்ளி ரிஸ்லெட் கெடியாரமும் வெள்ளி மிலனீஸ பட்டையும் சேர்ந்தது ரூ 12 8 0

---

### 8-மூலை காப்பு டையல் பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.

இந்த 8-மூலையுள்ள பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் பார்வைக்கு வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும், சரியானகாலத்தைக் காட்டும், வெகுகாலம் நன்ருய் போகும் இரவில் மணி நன்ருய்த் தெரியும்

உயர்ந்த தோல்பட்டையுடன் 9—8—0

ஷை நிக்கில்கேஸ் ரேடியம் 8-மூலை உள்ள கைகெடியாரம் தோல்பட்டையுடன் 8—0—0

### எலக்ட்ரோ கோல்ட் பிளேட் 8 மூலை ரிஸ்டு வாச்

இக்கெடியாரத்தின் கேசும் பிராஸ்லட்டும் எலக்ட்ரோ கோல்டினுல் செய்யப்பட்டுப் பார்வைக்கு வெகு சுந்தரமாயும் படத்தில் காட்டியதைப்போல் இருக்கும் இக்கெடியாரம் அமெரிக்காவில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டது ஒவ்வொரு கெடியாரமும் நேரில் பார்வை செய்து அனுப்பப்படும். பிராஸலெட்டுடன் ரூ. 8-8-0

வெள்ளி கெடியாரம் ரூ 9-0-0. நிக்கல் சேஸ் ரூ 7-0-0.

கதறிவந்தவர் களிப்புடன் செல்வார்.
விஷந் தீண்டினவர் ஒரே நிமிஷத்திற்
குணமடைவார். குணமில்லாவிட்டால்
இநாம் ரு. 100 இநாம்

## சர்வ தேள் விஷ சஞ்சீவி

இதை உபயோகித்து குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு மேற் கண்ட ரு 100 கொடுக்கப்படும். எல்லா வித விஷக்கடிகளும் இம் மருந்து போட்ட ஒரு நிமிஷத்திற்குள் நீங்கிவிடும்.

விலை பாகெட் 1-க்கு அணு 8.
டஜன் 1-க்கு விலை ரு. 5.

## நிக்கல் சிகரெட் கேஸ்.

இவைகள் ஜெர்மன் சில்வரால் செய்யப்பட்டவை பார்வைக்கு சுத்தமாகவும் பளபளப்பாகவு மிருக்கும். இதை சட்டை ஜேபியில் வைத்துக் கொள்ளலாம் இதில் சிகரெட், சிறு சுருட்டுகள் வைப்பதினுல் சருகுபோல் உலராமலும் மணம் குணம் மாராமலிருக்கும்.

ஒஸதி ரு 1 0 0
2-ந் தரம் அணு 8

## மன்மத தாதுபுஷ்டி கோலாகல குளிகை

விலைமாதர்களிடம் காதல்கொள்ளும் புருஷர்கள் மேற்படி மாத்திரையை உபயோகித்துக்கொண்டு ஸ்திரீயிடம் சம்போகத்திற்கு துடங்கினுல் இந்திரியம் ஸ்கலிதமாகாமல் நெடுநேரம்வரையில் லீலா இன்பத்தைத் தரக்கூடியது. ஷை மாத்திரை உபயோகிக்கும் விபரம் மாத்திரையுடன் அனுப்பப்படும்.

25 மாத்திரைகள் டப்பி 1-க்கு ரு 2—0—0
12 மாத்திரைகள் டப்பி 1-க்கு ரு 1—0—0

## ரோமசங்காரி என்னும் தர்பார் சோப்.

இந்த சோப்பைத் தேய்த்தவுடன் தேரகத்தில் எந்த இடத்திலுள்ள ரோமங்களையும் நீக்கிவிடும். இதனுல் எவ்வித எரிச்சல், கறை மற்றக் கெட்டவாசனை எதுவும் கிடையாது.

இதை ஒருமுறை உபயோகித்துப்பார்த்தால் உண்மை விளங்கும்.

3-சோப் அடங்கிய பெட்டி ரு. —14—0
6 ,, ,, 1—10—0

N T, ஜீவா அண்டு கோ., 1-332, தங்கசாலைத் தெருவு, சென்னை.

## அமைகோ என்னும் நூதன பயாஸ்கோப் பெட்டி.

இந்த "அமைகோ" ஜெர்மனியில் தயார் செய்தது. இதில் ஜெர்மனியின் தர்பார் பார்லிமென்ட் சபையில் ஒருவருக்கொருவர், தர்க்கம் செய்து பேசுவது, இங்கிலாந்தின் பெரிய அரண்மனைகள், காங்கிரஸ் சபை, லார்ட் சபை, குதிரைப் பட்டாளம், பீரங்கிபட்டாளம், ஆகாய விமானம், பட்டாளம் முதலியவை கபாத் செய்வது, தொழிற்சாலைகளின் காட்சி, மிருகஜந்துக்கள் சர்க்கஸ் ஆடுவது, குதிரை மோட்டார் பந்தயங்கள், இதுவுமல்லாமல் கீர்த்தி வாய்ந்த ஐரோப்பிய ஸ்தீரீ புருஷர் டிராமா ஆக்டர்கள் ஆக்ட்செய்த ஆட்டங்களையும் பெரிய பயாஸ்கோப் கம்பெனியில் காணுவதைப் போல் இரவிலும் பகலிலும் பார்க்கலாம்.

40 பல கலர் தந்த போட்டோ பிலிம்சுகளும் சேர்ந்து லென்சஸ் உள்பட கம்பிலீட் செட் 1க்கு ரூபா 1.

## ஜலதரங்கம் என்னும் சங்கித வாத்தியப் பெட்டி.

பெரியவர்களும் சிறியவர்களும் சங்கீதம் கற்றுக்கொள்வதற்கு இது ஓர் ஏற்றகருவியாகும் ஜலதரங்கம் வாசிப்பதுபோல் இதை அருமையாக வாசிக்கலாம் விலை வெகு சுலபம்.

பெட்டி 1-க்கு ரூபா 1.

## பட்டு அங்கவஸ்திரங்கள்.

இவைகள் மிக நேர்த்தியான பளபளப்புள்ள பட்டினால் செய்தது, இவைகளை ஆண்பிள்ளைகள் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்ரீகள் மேலாக்காகவும், சிறுபிள்ளைகள் தாவணியாகவும் உபயோகிக்கலாம். இதில் ரோஸ், பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, மேகவர்னம், வெங்காயப் புரைவர்னம், கத்திரிப்பூவர்னம் முதலிய அநேக வர்னங்கள் உண்டு, 5½ முழம் நிகளமும் 2½ முழம் அகலமும் உள்ள பட்டு துப்பட்டா அழகிய கரையுடன் கிடைக்கும்.

குட்டை 1-க்கு விலை ரூபா 3 10 0

## தேச பக்தர்களின் படம்.

மகாத்மா காந்தி, திலகர், லாலாலஜபதிராய், சீ. ஆர். தாஸ், அலி சகோதரர்கள், சரோஜினிதேவி, பண்டிட் மாலவியா, லோகமாதா முதலான தேசபக்தர்களின் படங்களெல்லாம் மிக அழகாயும் தயாராய் வர்னமடிக்கப் பட்டிருக்கிறது.

50 படங்கள் விலை ரூபா 2. 25 படங்கள் விலை 1-4-0

# நூதனமான சேலைகள்.

## மதுரை அழகிய புட்டாச் சேலை.

16-முழம் விலைமிகவும் சரசமாயும் பார்வைக்கு அழகாயும் கோர்த்தியாயும், நீடித்துழைக்கக் கூடியதாயு மிருக்கும். விலை ரு. 5.

| | ரு. | அ. | | ரு. | அ. |
|---|---|---|---|---|---|
| பார்ஸி சரிகை சேலை | 7 | 8 | நரசாபுரம் சாதா | 7 | 4 |
| சாவித்திரி | 7 | 4 | புதுச்சேரி | 6 | 4 |
| வெள்ளை மாங்காய் | 5 | 8 | சகுந்தலா | 8 | 0 |
| பங்தர் தவனக்கொடி | 4 | 8 | ரோஜா கலர் சரிகை | 8 | 0 |
| நடுத்தர வங்காய் பொரை | 6 | 0 | காளாஸ்திரி மல் | 4 | 0 |

## பெல்ட் பௌண்டன் பேனா.

இப்பொழுது தான் சீமையிலிருந்து வரவழைக்கப் பட்டது இந்தப்பேனாவினால் எழுதுவதனால் முத்துப்போலிருக்கும் சீக்கிரம் ஆர்டர் செய்யுங்கள். இதன் விலை பேனா 1-க்கு ரு 1-8-0

## அமெரிக்கன் எலக்டிரிக் காரட் கோள்ட் மோதிரங்கள்.

இஷ்டமான ரகத்தை பெற்றுக்கொள்ளலாம் இவ்வழகிய மோதிரங்களில் வெள்ளை, பசசை நீலம் சிகப்பு, கோமேதகம் வைடூரியம் என்னும் இமிடேஷன் கற்கள் புதைத்து பலவித சித்திரங்களுடன் படத்தில் காட்டியபடி தயாசெய்து ஜர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றது.

மோதிரம் 1க்கு ரு. 2. மோதிரம் 3க்கு 5-8-0

## இமிடேஷன் டைமண்ட் கம்மல்கள்.

படத்தில் காட்டியபடி இந்த கம்மல்கள் அமெரிக்காவில் இருந்து கார்ட் ரோல்ட்கோல்டினால் செய்த இமிடேஷன் வைரங்கள் பதிந்து தயார்செய்து வரவழைக்கப்பட்டது. பார்ப்பவர்களுக்கு கம்மல் மதிப்பு ரூபா 300 பெரும்படியாக யிருக்கும். இதை ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்,

பெட்டியுள்பட ரூபா 3—0—0

## கையில் அமுத்தும் ஸ்பிரிங் விசிறி.

இவ்விசிரியானது சுப காரியங்களிலும் பொதுஜன கூடங்களிலும் பெட்ரும் முதலிய காற்று வசிதியில்லாமல் கஷ்டப்படும் காலத்திலும் இதை பெரியவிரலில் அழுத்தினால் சுழன்று மனத்திற்கு ஆனந்தபரவச காற்று தருவது இதுவே.

விலை 1-க்கு ரூபா 3-0-0

½-டஜன் அல்லது விசிறி விலை ரூபா 8.

## விசித்திரமான ஸ்காந்த சக்கரம்.

இதில்கண்ட சக்கரத்தை சமமான இடத்தில் இருப்பி திரும்பும்படியான சமயத்தில் இதில் கண்ட மீன் மனிதர் டம்பல்ஸ் பாம்பு சக்கரம் வாத்து முதலானவைகளை ஒவ்வொன்றாய் இச்சக்கரத்தின் அடிபாகத்தில் மாட்டினால் நன்றாய் ஆடும் பார்ப்பதற்கு வெகு தமாஷாயிருக்கும் இதுவரைக்கும் பார்க்காதது.

இதன் விலை 1-க்கு அணா 8

## ரோல்ட் கோல்ட் மங்களூர் கைவளையல்கள்.



இது பளபளப்பான ரோல் கோல்டு இமிடேஷன் பொன்னினால் பலமாதிரி பூ இலைகொடிகள் ஒன்றோடொன்று பின்னியது போல வெகு அழகாயும் வேலைத்திரமாயும் செய்யப்பட்டு சீமையிலிருந்து வந்திருக்கிறது இதைபார்ப்பவர்கள் பொன்னால் செய்த கைவளையல் என்றே எண்ணுவார்கள் எப்பொழுதும் கருக்காமல் இருக்கும் இது எல்லா மதஸ்தர்களும் பெரியோர்களும் சிறியோர்களும் அணிந்துக்கொள்ளலாம்.

ஜதை 1க்கு விலை ரு 2. 2 ஜதை வாங்கினால் தபால் செலவு இனாம்.

அமெரிக்கன் கோல்டு பாலிஷ் போடப்பட்ட 50 கெஜ்ஜைகள் கட்டின ஒட்டியாணம் 1-க்கு ருபா 5. சிறிய சைஸ் 1-க்கு ரு 4

## சாண்டோ ஆயில்.

நபும்சவம் ஆண்தன்மையிழந்த மானிடர்களுக்கு இத்தைலம் ஓர் ஊன்றுகோலாய் ஆதரிக்கிறது. அனேக தனவான்கள் இத்தைலத்தை உபயோகித்து நல்ல ஆச்சரியமும் ஆனந்தமடைந்திருக்கிறார்கள். புட்டி 1-க்கு விலை ருபா. 1 0 0

## வாயில் வைத்து ஊதும் வாத்தியம்

இச்சிறு வாத்தியங்கள் சிறு பிள்ளைகள் வாயில் வைத்து ஊதினால் வெகு இனிமையான சத்தம் உண்டாகும் சாக்யான முள்ளவர்கள் இதிலேயே பாட்டுகள் வாசிக்கிறார்கள். விலை அணா 12

## இராஜஸ் க்ஷவரக்கத்தி

இதை வைத்துக்கொண்டு க்ஷவரக்சாலைத்தில் நாவிதனிடம் கொடுத்து க்ஷவரம் செய்துகொள்வதால் அன்னியர்களுடைய சொரி சிரங்கு புண் சுண்டு முதலியவை வராமல் தலை எரிச்சலில்லாமல் சுகமாயிருக்கும் சீமை மேக்கர் நல்லமாதிரிகத்தி ருபா 2 0 0

## A BOON TO SMOKERS.

### எலெக்டிரிக் சிகார் லைட் விளக்கு

இந்த விளக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும் வத்தியும் அதைக் கொளுத்த நெருப்புக்குச்சியும் தேவையில்லை. எலெக்டிரிக் சத்தியினால் எரியும் நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன்படி செய்து மேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கிரத்தை திருப்பினால் திக்கென்று பளபளப்பான பிரகாசத்துடன் எரியும் பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையை கழட்டிவிட்டு பெட்ரோல் எண்ணை போட வேண்டியது.

லைட் 1-க்கு விலை ... ... ரூ 1 0 0

ஒரே தடவையில் 3-லைட் ... ... ரூ 2 10 0

### அமெரிக்கன் எலக்டிரிக் ஸ்டவ் என்னும் நூதன அடுப்பு.

இந்த ஸ்டவ்வுக்கு எவ்விதமான பெட்ரோல் எண்ணையும் அல்லது ஸ்பிரிட்டும் தேவையில்லை இதனுடன்வரும் பெட்டியிலிருக்கும் கட்டியை ஒன்று எடுத்து இந்த அடுப்பின்மேல் வைத்து தீ வைத்து விட்டால் பெரிய ஸ்டவ்களைப்போல் பற்றிக்கொள்ளும் இதனால் காப்பி, டி, கஞ்சி, பலகாரம் முதலானது வெகு சுலபமாய் செய்துக்கொள்ளலாம். இதன் விலை ரூபா 3.

### பவுண்டன் பேனா பென்சல் எலக்டிரிக் லைட்.

இதில் ஒரு பக்கம்பேனா ஒருபக்கம் பென்சலும் மறுபக்கம் எலக்டிரிக் லைட் அமைத்திருக்கிறது தீப்பெட்டிக்கு பதில் இந்தப் பேனா ஒன்று கையில் இருந்தால் எப்போதும் தீப்பெட்டியாகவும் எழுதுவதற்கு பேனாவும் பென்சலும் அடங்கியிருப்பது மன்றி பார்வைக்கு பவுண்டன் பேனாபோல் செய்திருக்கிறது. அழகான நிக்கல் கிலிப்பும் அடங்கியிருக்கின்றது. பேனா 1-க்கு ரூபா 1-8-0.

### எலக்டிரிக் கைவிளக்குகள்.



எஃகுவினால் செய்யப்பட்டதும் உயர்ந்த நிக்கில் பாலிஷ்குடுத்ததும் 2-அங்குல லென்சுடன் பாகட் லாம்பு. அளவுள்ள பாடரி பல்புடன் விலை ரூபா 5-8-0.

டார்ச் லைட் கம்பிலீட் பாட்ரி பல்புடன் விலை ரூபா 8.

பேபி டார்ச் லைட் ,, ரூபா 5.

### எலக்டிரிக் பாகெட் விளக்குகள்.



$1\frac{1}{4}$-அங்குல லென்சுடனும், பல்பு, பாட்டரிகளுடன் விலை ரூ. 2-8-0 தனிபாடரி 1-க்கு அ. 12. தனிபல்பு அ 6

புல்ஸ் ஐ லென்ஸ் பாகெட் லாம்பு ரூ. 5

வவ்வல் லென்ஸ் பாகெட் லாம்பு ரூ. 4

டிரை சலர் லாம்பு ரூ. 4

# விளம்பரங்கள்


## ஆத்மசக்தி

இஃது ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை இதில் காணப்படும் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கான வியாசங்கள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றின் அநுபவங்கள், வேதாந்தம் இதிகாஸ புராணங்களின் நுட்பம், விகடத்திரட்டு, வைத்தியக் குறிப்பு, சிறு கதைகள், அரிய பெரிய நவீனம் (நாவல்), தேசிய கீதங்கள், மாணவர் சிறுமியர்க்கான இன்ப உரைகள் முதலியவை பல அறிஞர்களால் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவரும் விஷயமனைத்தும் ஆடவர் பெண்பாலர் சிறுவர் அனைவருக்கும் பயன்தரக்கூடியன.

வருட சந்தா:— உள்ளூருக்கு (புதுவை) ரு 0—12—0
வெளியூருக்கு வெளிநாடுகளுக்கு ரு 1—4—0

"ஆத்மசக்தி" கார்யாலயம், புதுச்சேரி.

## கற்பகம்

ஒரு செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ. 1 0 0 வெளிநாட்டிற்கு ரூ. 1 8 0

இது கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம். வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரிய விஷயங்களுடன் வெளிவருகிறது. மானேஜர் "கற்பகம்" ஆபீஸ், புதுவை.

## தேசானுகூலன்

இஃதோரு சிறந்த தமிழ்ப் பத்திரிகை. வாரம் இருமுறை பினங்கினின்று தேசிய ராஜீய விஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப் படித்தறிந்து கொள்ள வேண்டுமின்றி எழுத வியலாது.

உளளூர் வெளியூர்கட்கு வருடம் 1-க்கு றிங்கி $ 10—0—0 அல்லது ரூபா 15—0—0 6 மாதத்துக்கு $ 5—5—0 அல்லது ரூபா 8—0—0

மானேஜர், தேசானுகூலன், பினங்கு.

## தமிழகம்

மலாய் நாட்டின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. இஃது மலாய்நாடு. பிரஞ்சு, கொச்சின், சீனு நெதர்லாண்டு, இண்டிஸ், டேபுனியோ, இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. கீழ்தேசப் பகுதிகளுக்கு இதன் வருட சந்தா, வெள்ளி 10.00. ஆறு மாதங்களுக்கு வெள்ளி 5.5. இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் கென்யா முதலிய மேல்நாடுகளுக்கு வருட சந்தா ரூ 15. ஆறு மாதங்களுக்கு ரூ. 8,

மானேஜர்:—"தமிழகம்" ஆபீஸ்,
190 பத்துரோட்டு, கோலாலம்பூர், ஐக்கிய மலாய்நாடுகள்.

## கிராம பரிபாலனம்

மாதம் இருமுறை வெளிவரும் சிறந்த பத்திரிகை.

கிராமவாசிகள், கிராம அதிகாரிகள், ஆரம்ப ஆசிரியர் இவர்கள் நன்மையை நாடி உழைப்பது இப்பத்திரிகை. தாய் நாட்டின் உயிர் நிலை கிராமங்களாதலின், கிராம அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றமாகும். இத்தகைய முன்னேற்றத்தை நாடும் பத்திரிகையை ஆதரிப்பது தமிழர் கடமையாம்.

ஆண்டுச்சந்தா உள்நாடு ரு 5—0—0 வெளிநாடு ரு 6—0—0

மானேஜர்:—"கிராம பரிபாலன" ஆபீஸ், திருநெல்வேலி.

## தமிழ் போதினியை வாசியுங்கள்,

இது யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஓர் அரிய சஞ்சிகை. பிரபல பத்திரிகாசிரியர்கள், தேசாபிமானிகள், கல்விமான்கள் முதலிய பெரியோரால் பெரிதும் பாராட்டப்படுவதும், அரசியற் குறைகளை அஞ்சா நெஞ்சுடன் வெளியிடுவதும், பாமரஜனத்தை முன்னேற்ற வல்லதும் இதுவே.

வருட சந்தா இலங்கை, இந்தியா ரு. 3 சிங்கப்பூர், மலாய்நாடு ரு. 4

தமிழ் போதினி ஆபீஸ், P. O வண்ணார்பண்ணை, (இலங்கை.)

## பணம்

திருச்சிராப்பள்ளியினின்றும் 1-9-22 முதல் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவந்துலாவும் தெள்ளிய தமிழ் வாரவர்த்தமானி.

வாரந்தோறும் வெளியாவது. தேசநன்மையையேநாடி எழுதப்படுவது. அறிவைவிளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்தது. எவர் கையிலும் இப்பத்திக்கையை இனிக் காணலாம் படிக்க படிக்க விஷய மறிவதறில் பேரானந்தம் பெருகும். வருடசந்தா ரூபா 5

மானேஜர்:—"பணம்" ஆபீஸ், திருச்சி.

## கமத்தொழில் விளக்கம்

இலங்கைத் கமத்தொழிற் பகுதியின் அனுமதிப்படி பிரசுரஞ் செய்விக்கப்படும் கமத்தொழில் விளக்கம் என்னும் மாதாந்தப்பத்திரிகை இலங்கைக் கமச்சங்கத்து அங்கத்தவர்களுக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

உள்ளூருக்கும் இந்தியாவுக்கும் வருஷம் ஒன்றுக்கு 1 ருபா 50 ச.

பினாங்கு, சிங்கப்பூர் முதலியவைகளுக்கு 2 ருபா 25 சதம்.

கமத்தொழில் விளக்கம், சிலோன்.

## கதாரஞ்சினி

நாவல் நிறைந்த மாத சஞ்சிகை.

1922ஆம் ஜனவரிமீ முதல் நடைபெற்று வருகிறது. இதில் அரிய நவீனங்களும், வேதாந்தங்களும், விகடகதை, விகடதுணுக்குகளும் வெளிவரும் தற்சமயம் அதி அற்புதமாயுள்ள நாவல் எழுதப்பட்டு வருகிறது.

வருடசந்தா 1 4 0 வெளிநாடு 2 0 0 தனிப்பிரதி 0 2 6

மனேஜர். கதாரஞ்சினி ஆபீஸ், திருப்பாதிரிப்புலியூர்.

# வியாபாரி

குறைந்த சந்தாவில் நிறைந்த விஷயங்களுடன்
வெளிவரும் சிறந்த மாதாந்தப் பத்திரிகை.
உயர்ந்த நோக்கத்துடன் தேர்ந்த கல்வியாளரால்
எழுதப்பட்டுலவுகின்றது.

விருடச் சந்தா: உள்ளூருக்கு ரூ 1. வெளிநாட்டுக்கு ரூ 1¼

ஈஸ்வர கடாட்சத்தை பெறுவதற்குரித்தான பக்தி ரசக் கீதங்களுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

ஆண் பெண் பாலர்க்கு அறிவூட்டும் நன்னடை தீபிகையுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

இந்தியாவின் சீர்திருத்தத்தை மிக இனிமையா யுபதேசிக்கும் தேசிய கீதங்களுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

மாந்தர்களின் பலவீனத்தை உள்ளது உள்ளபடியே மொழிந்து அவர்களின் சபல புத்தியையும் மாறும் சுபாவத்தின் கூற்றையும் தெளிவாய் வரைந்து நன்னெறியில் நடப்பிக்கும் ஆற்றலுடையவரான பிராஞ்சு பிரபல கவி (Racine) ரசின் என்பாரின் நூல்களைத் தழுவி எழுதப்பட்ட சௌந்தரவல்லி என்னும் நாவலுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

எக்கஷ்டம் நேரிடினும், உரியவர்களை துறந்தும் பிரியமுள்ளதை வெறுத்தும் கடமையே கைக்கொள்ளவேண்டும் எனும் விரதத்தையும் உலகில் மாந்தர் எவ்விதம் இருக்கவேணும் என்பதையும் நன்கு விளக்கிக்காட்டிய பிராஞ்சு நாடக ஸ்தாபகரான (Corneille) கொர்னேய் என்பவரின் நூல்களை தழுவி வரையப்பட்ட பாரிதம் என்னும் கதையுடன் வெளிவரும் பத்திரிகை இஃதொன்றே!

தன்னலங் கருதாது பொதுஜன அபிவிருத்தியை நாடியும் சந்தாத் தொகையை தர்மகைங்கர்யங்களுக்கு உபயோகப்படுத்தியும் உயிர்களுக்கு உதவுதலே ஈசனை ஆராதித்தல் என்னும் கொள்கை யனுஷ்டித்து பரோபகார சிந்தையுடன் வெளிவரும் பத்திரிகை
இஃதொன்றே!

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வியாபாரியிடத்திலும் உலவவேண்டி குறைந்த விளம்பர விகிதத்துடன் வெளிவரும் பத்திரிகை
இஃதொன்றே?

**விளம்பர விகிதம்.**

| | ¼ பக்கம் | ½ பக்கம் | முழுபக்கம் |
|---|---|---|---|
| 1 மாதத்துக்கு | 1 8 0 | 3 0 0 | 5 0 0 |
| 3 ,, | 4 0 0 | 8 0 0 | 12 0 0 |
| 6 ,, | 6 0 0 | 12 0 0 | 20 0 0 |
| ஒருவருடத்துக்கு | 10 0 0 | 20 0 0 | 30 0 0 |

முழுத்தொகையும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

'வியாபாரி' காரியாலயம், புதுச்சேரி.

## சோதிட கலாநிதி

ஓர் அரிய தமிழ் சோதிட மாதாந்தப் பத்திரிகை.

இதில் சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் பத்திமார்க்கம், ஸ்திரீகள் பதிவிரதா தருமம் ஆகிய பல அரிய பெரிய விஷயங்கள் வெளிவருகின்றன. இது அவரவர்களுடைய காலபலத்தையும், அந்தந்த மாதத்திய லாபநஷ்டங்களையும் நன்கு விளக்கும் ஆற்றலுடையது. நன்கு கற்றறிந்த பண்டிதர்களால் எழுதப்பெற்றுப் பிரதி தமிழ்மாதம் முதல்தேதியில் வெளிவருவது.

வருஷ சந்தா உள்நாடு ரு 1—0—0 வெளிநாடு ரு 1—4—0

"ஜோதிடகலாநிதி" ஆபீஸ், வேலப்பாடி, இராயவேலூர்.

## குடும்பதீபம்

குடும்பத்தை நடத்துவதற்குறிய நல்லறிவைக் குடும்பங்களுக்குட் பரவச்செய்வதற்கான உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சந்தா விபரம்:- உள்ளூருக்கும் இந்தியாவிற்கும் ரு 1 4 0

அயல் நாடுகளுக்கு ரு 2 4 0

பத்திராதிபர் 'குடும்பதீபம்' வட்டுக்கோட்டை, சிலோன்

## இந்துநேசன்

சனிக்கிழமைதோறும் பிரசுரமாகும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதில் இனிய வியாசங்களும் அரிய விஷயங்களும் அடங்கியுள்ளன.

வருடசந்தா ரூ 6 0 0 தனிப்பிரதி அணா 2

'இந்துநேசன்' ஆபீஸ், 65, அரமனைக்காரன் தெரு, சென்னை.

## பேராசிரியன்

துரைத்தனத்தாரால் ஆதரிக்கப்பட்டது

பள்ளிக்கூடங்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உபயோகமான மாதாந்தப் பத்திரிகை. வருடசந்தா ருபா 1 8 0

என். வெங்கடராயலு அண்டு சன்ஸ் முத்தியாலுபேட்டை சென்னை

## ஜனரஞ்ஜனி

ஜனஸமூகம் கல்வி தேசசரித்திரம் மதம் சாஸ்திரங்கள் உபயோகமான விஷயங்கள் நாவல்கள் வேடிக்கை விநோதங்கள் முதலியவை நிறைந்துள்ள மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

வருஷ சந்தா

உள்நாடுகளுக்கு ரு 2 வெளிநாடுகளுக்கு ரு 3 தனிப்பிரதி அணா 4

## விநோத விகடன்

விசித்திரப் படங்களுடன் வெள்ளிதோறும் தவறாமல் வெளிவரும் ஓர் இனிய விகடப் பத்திரிகை இதுதான்!

நீங்கள் சந்தாதாரராக இல்லாமலிருந்தால் உடனே சேர்ந்து இப்பத்திரிகையை வாசியுங்கள், இதில் உள்ளூர் வெளியூர் விசேஷங்களும் வெளியாகின்றது.

இந்தியாவுக்கும் உள்ளூருக்கும் ருபா 4—0—0

பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு ருபா 5—0—0

பத்திராதிபர்:—ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்,

விநோத விகடன் ஆபீஸ் வண்ணாரப்பேட்டை, மதருஸ்.

இனாம்! உயர்ந்த பவுண்டன்பேனா ஒன்று இனாம்!

# ரூபாய் 500 மதிப்பிடக்கூடிய ரோல்ட் கோல்ட் இமிடேஷன் வைர மோதிரம்.



இம்மோதிரங்கள் ரோல்ட் கோல்டினால் செய்து இமிடேஷன் வைர வெள்ளை கற்கள் பதிந்து தற்கால நாகரீகத்திற்கு ஏற்றபடி தயாரித்து வரவழைத்திருக்கிறோம். இக்கற்களின் பிரகாசமும் ஜொலிஜொலிப்பும் அசல் வைர மோதிரத்திற்குச் சமானமாயிருக்கும், இதைப் பார்ப்பவர்கள் அசல் வைர மோதிரமென்றே நினைப்பார்கள். இவை இங்கிலீஷ் இமிடேஷன் டைமண்டு ஆனதினால் என்றைக்கும் கருக்காமல் பளபளப்பாகவே இருக்கும். இம்மாதத்திற்குள் ஷை மோதிரம் தருவிப்பவர்களுக்கு உயர்ந்த பவுண்டன்பேனா ஒன்று இனாமாய் அனுப்பப்படும்.

மோதிரம் 1-க்கு பேனா உள்பட ரூ 1—11—0

**கமர்ஷியல் ஏஜன்ஸி,**

போஸ்ட் பாக்ஸ் நெ. 195, மதராஸ்.

---

# டிடக்டாஸ்கோப்.

## அல்லது துப்பு (இரகசியப்) அறியும் கருவி.

இக்கருவியானது அமெரிக்கா தேசத்தில் புதிதாய் கண்டுபிடிக்கப்பட்டு தற்சமயம் எம்மால் முதல் முதல் வரவழைக்கப்பட்டன. இதன் உபயோகம் யாதெனில் இதன் மூலமாய் நாம் இருக்கும் இடத்தில் இருந்தே ஒருவரும் அறிந்துக்கொள்ளாமல் முத்திசையில் நடக்கும் பலவித ரகசியங்களையும் உம்முடைய காதலியையும் அதோடு அவள்செய்யும் காரியங்களும் இன்னும் பலவித அந்தரங்க ரகசியங்களையும் அவள் அறிந்துக்கொள்ளாமல் இதன் மூலியமாய் காணலாம், இவை பகல் அல்லது இரவு எந்த காலத்திலும் உபயோகிக்கலாம். இவை ஓர் அழகிய சிறு கருவியானதால் ஒருவரும் காணாமல் ஜேபியில் வைத்துக்கொள்ளலாம். உபயோகிக்கும் விதங்கள் பார்சலுடன் அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| கருவி 1-க்கு | ரூபா | 2 0 0 |
| கருவி 3-க்கு | ,, | 5 0 0 |

ஒரே தடவையில் 3 கருவி வாங்குபவர்களுக்கு 6 படுக்கை அறையின் அழகிய லீலாவினோத போட்டோ படங்கள் இனாமாக அனுப்பப்படும்.

**எம். லீலா அண்டு கோ.,**

சௌகார்பேட்டை, மதராஸ்.

வெளியாகிவிட்டது! சுத்தமான பதிப்பு!

நெடுநாள்களாய் வெளிவராதிருந்த

# போகமுனிவர் 7000 பாடல்.

இது வயித்தியநூலில் முக்கியமானது. இது நெடுநாளாய் அச்சில்லாமல் வேண்டிய வயித்தியர்களும், இல்லரத்தாரும் யெப்போது அச்சிடுவார்கள் யென்று யெதிர்பார்த்திருந்த வயித்தியநூல் அச்சிட்டு வெளியாய்விட்டது.

சுத்தமான பதிப்பு விலை ரூபா 4—0—0

செய்முறை பாகெட் வயித்தியம். ரூபா 1—0—0

# பகவத்கீதை வசனம்.

## 18-அத்தியாயங்கள் அடங்கிய

பாகெட் சயிலெ படங்களுடன்.

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத் வாக்யங்கள் ஆங்காங்கு உபஹரிக்கப் 'பட்டிருக்கின்றன.

யோக ஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இவைகளே முதன்மை பெற்றனவாம். அலையுமனத்தைஅகத்தில்அடக்குவதற்கு அரியபெரியகருவிகளாகும். கற்றோரேயன்றிமற்றோரும் களிப்புடன் வாசிக்கத்தக்கனவாம் ஏழைகளும் எளிதில் வாங்கும் பொருட்டே பாக்கெட் அளவு விலை மிகவும் சஹாயமாய் ஏற்படுத்தப்பட்டது.

இதன் விலை ரூபா் 0-8-0 ஷை காலிகோபயிண்டு 0-10-0

ஷை வசனம்பெரிசு 1-8-0 ஷை கிரந்தசுலோகம்தமிழ்அர்த்தம் 1-0-0

| தமிழ் நாவல்கள் | | டிராமா தினுசுகள். | |
|---|---|---|---|
| ஞானசுந்தரன் | 0-12-0 | கிருஷ்னன் லீலை | 0-4-0 |
| மங்கைமோகனுள் | 0-8-0 | சதி அனுசுயா | 0-4-0 |
| விகடமோகனு | 0-8-0 | ஷை இரண்டாம் பாகம் | 0-4-0 |
| கண்டிராஜன் | 0-8-0 | பாரீஸ் லங்காதகனம் | 0-4-0 |
| டங்கு டிங்கு ரவாமணி | 0-6-0 | பாரீஸ் மதிவல்லபமோகனு | 0-4-0 |
| காமேந்திர ஞானலோசனி | 1-0-0 | நல்லதங்காள் சரித்திரம் | 0-4-0 |
| சுயம்பிரகாசவதனி | 1-0-0 | ஷை இரண்டாம் பாகம் | 0-4-0 |
| அமரநாதன் | 1-4-0 | கோவிலன் கர்னகி | 0-4-0 |
| கனகம்மாள் | 1-2-0 | ஷை இரண்டாம் பாகம் | 0-4-0 |
| குலசேகரன் | 1-0-0 | கெஜேந்திரமோக்ஷம் | 0-4-0 |
| கமலநாதன் | 2-0-0 | குசலவ சரித்திரம் டிராமா | 0-4-0 |
| ஜீஜாபாய் | 1-4-0 | கதர்த்துணிப் பாட்டு | 0-1-0 |

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 5, வீராசாமி பிள்ளை வீதி,

மின்ட்புல்டிங் போஸ்டு, சென்னை.